விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 01 ஞாயிற்றுக்கிழமை (13.04.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 116



SATS TECH

யாழ். நகரின் முன்னணி Satellite & Cable TV நிறுவனம்

DIAL 021 222 5908


## நாட்டில் நிலைத்த சமாதானம் ஏற்பட அனைவரும் ஒருமித்துக் குரல் கொடுப்போம்



(யாழ்ப்பாணம்)

மலருகின்ற சர்வதாரிப் புத்தாண்டில் அமைதியும் நிலைத்த சமாதானமும் ஏற்பட நாட்டு மக்கள் அனைவரும் இறைவனை மனதார இறைஞ்ச வேண்டும். அதுவே எம்மைப் பீடித்துள்ள துன்பமும் பயமும் நீங்கி புதிய வாழ்வு மலர வழி சமைக்கும்.

இவ்வாறு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளும், சர்வதேச இந்து மத குரு பீடாதிபதி சிவஸ்ரீ ஜம்புகேஸ்வர மகேஸ்வரக் குருக்களும் விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் செயற்கையாலும் *(16 ஆம் பக்கம் பார்க்க)*



### புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

மலரும் சர்வதாரி புத்தாண்டில் எல்லோரும் எல்லா நலனும் பெற்று நல்வாழ்வு வாழ இறை திருவருளை வேண்டி அனைவருக்கும் எம் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வலம்புரிக் குடும்பம்

## ★ தமிழீழம் மலர்ந்தே தீரும் ★

# சிங்களப் பிரதிநிதிகளுடன் வை.கோ. கடும் வாக்குவாதம்



### நோர்வே மாநாட்டில் காரசாரம்

(ஒஸ்லோ)

நோர்வேயில் நடைபெற்ற 'தெற்காசியாவின் அமைதியும் சமாதானமும்' மாநாட்டில் இலங்கை இனப்பிரச்சினை குறித்து பொய்யான தகவல்களை முன்வைத்த சிங்களத் தரப்பினர்களுடன் தமிழ்நாட்டின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வை.கோ. கடும் வாக்குவாதங்களை நடத்தினார். தமிழீழம் மலர்ந்தே தீரும் என அடித்துக் கூறினார். *(02 ஆம் பக்கம் பார்க்க)*

### பருத்தித்துறையில் குண்டுத்தாக்குதல் சிப்பாய் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நெல்லியடி வீதி முடக்காட்டுச் சந்தியில் அமைந்துள்ள காவலரண்மீது நடத்தப்பட்ட குண்டுதாக்குதலில் படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் *(16ஆம் பக்கம் பார்க்க)*

## மன்னாரில் முன்னகர்வினை எதிர்த்து விடுதலைப்புலிகள் தாக்குதல்

### 30 படையினர் பலி; 75 பேர் காயம்; புலிகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

மன்னாரில் நேற்றுப் படையினர் 4 முனைகளில் பெருமெடுப்பில் நடத்திய தாக்குதல்களுக்கு எதிராக தாம் நடத்திய தீவிர தாக்குதலில் படைத் தரப்பினர் பலத்த இழப்புக்களைச் சந்தித்துள்ளனர்.

இச் சமர்களில் 30 படையினர் கொல்லப்பட்டனர். 75 படையினர் காயமடைந்துள்ளனர். இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

படையினர் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் *(16 ஆம் பக்கம் பார்க்க)*

## அமைச்சர்களைப் பாதுகாக்க 'கறுப்புப் பூனை' பயிற்சி தேவை

### இந்தியாவிடம் இலங்கை கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் விசேட பிரமுகர்கள் மற்றும் அமைச்சர்களை பாதுகாப்பதற்கான அமைச்சரவை பாதுகாப்பு பிரிவுகளுக்கு மேலதிக பயிற்சிகளை வழங்குமாறு இந்தியாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்கள் மற்றும் விசேட பிரமுகர்களின் உள்வளைய பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டு வரும் அமைச்சரவை பாதுகாப்புப் பிரிவிற்கு ஏற்கனவே இந்தியாவின் கறுப்பு பூனைகள் படையணியால் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

எனினும் இந்தியாவில் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை *(16 ஆம் பக்கம் பார்க்க)*


மிதிவெடி விழிப்புணர்வு தினம் : ஏப்ரல் 1 - 14

யுத்தப் பிரதேசங்கள், கைவிடப்பட்ட காவலரண்கள், பதுங்குகுழிகள்

என்பவற்றில் வெடிபொருள் ஆபத்துக்கள் இருக்கலாம்.

'சர்வோதயம்' 'யுனிசெவ்'



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சிங்களப் பிரதிநிதிகளுடன்...

தெற்காசிய இலங்கை பிரச்சினை குறித்து அம் மாநாட்டு அரங்கத்திலேயே விவாதமேடை ஒன்று அமைக்கப்பட்டது. அதற்கு ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினரான எரிகா மான் அம்மையார் (இந்த அம்மையார் தான் கொசாவோ தனிநாடு உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவாக ஜெர்மனி நாடாளுமன்றத்திலும் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்திலும் தொடர்ந்து ஆதரவாக குரல் கொடுத்து வந்தவர்) தலைமை தாங்கினார்.

அந்த விவாத மேடையில் வை.கோ., இலங்கை அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான், முன்னாள் அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனா, பௌத்த பிக்குகளாக பிரம்மனவாட்டியா சிவாலி நாயக்க தேரோ, மடுலுவாவே சோபித நாயக்க தேரோ, நோர்வேயில் சர்வதேச அமைப்பில் பணியாற்றும் சிங்களவரான பேராசிரியர் இந்திரா டி சோசா மற்றும் பேராசிரியர் ராஜீவ விஜயசிங்க ஆகியோர் கருத்துக்களை முன்வைத்தனர்.

பேராசிரியர் ராஜீவ விஜயசிங்க அங்கு கருத்துக் கூறுகையில், இங்கு வந்து வை.கோ. உணர்ச்சியைத் தூண்டுவதற்காக சில கடுமையான சொற்களைக் கசப்பாக பேசினார். செஞ்சோலையில் ஆதரவற்ற சிறுமிகள் கொல்லப்படவில்லை. அது விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாமாகத்தான் இருந்தது.

13-வது அரசியல் திருத்தச் சட்டத்தின் மூலம் இலங்கை பிரச்சினைக்கு தீர்வு ஏற்படும். இப்பொழுது கிழக்கு மாகாணத்தில் தேர்தலை அரசு நடத்துகின்றது. தமிழர் பகுதிகளுக்கு அதிகாரப் பகிர்வு அளிக்கப்படும் என்றார்.

அதனை மறுத்த வை. கோ. அங்கு உரையாற்றுகையில், ஆதரவற்ற சிறுமிகள் கொல்லப்பட்டது சர்வதேச கண்காணிப்பு குழுவுக்கு நன்றாகத் தெரியும் படங்களும் ஒளிப்பட இறுவெட்டுகளும் உள்ளன.

13-வது சட்டத்திருத்தம் கடந்த காலத்திலேயே தமிழர்களால் நிராகரிக்கப்பட்டுவிட்டது. கிழக்கு மாகாணத்தில் தேர்தல் என்பது மோசடியாகும்.

அங்கு கிழக்கில் துரோகக் கும்பலை உருவாக்கி சிங்கள அரசு இராணுவத்தைக் கொண்டு மோசடித் தேர்தலை நடத்துகிறது.

இலங்கைத் தீவில் வடக்கு கிழக்கு இரு பகுதிகளும், தமிழர் தாயகமாக ஒரே பகுதியாக கருதப்பட வேண்டும். இதைப்பிரிவினை செய்து அநீதியை அரசு தொடர்கிறது என்றார்.

பௌத்த பிக்குவான மடுலுவாவே சோபித நாயக்க தேரோ சிங்கள மொழியில் பேசியதை ஜெயலத் ஜெயவர்த்தனா ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அவர் தனது உரையில் கூறியதாவது,

தமிழர்களின் தாயகம் என்பதை ஏற்க முடியாது. சிங்களவர்கள் பகுதிகளிலும் தமிழர்கள் நிறைய வசிக்கிறார்கள். தமிழ் ஈழம் என்பது வெறும் கனவு. அது நடக்காது. பல இனங்கள் சேர்ந்து வாழுகிற நாடுகள்தான் நன்றாக இருக்கும். இனிமேல் நாடுகள் தனியாகப் பிரியக் கூடாது என்றார்.

ஆறுமுகம் தொண்டைமான் பேசுகையில், இப்பொழுது தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்படுகிறது. தமிழ் மொழிக்கும் சமத்துவம் வழங்கப்படுகிறது. தமிழர்களுக்கு அதிகாரம் வழங்க மகிந்த அரசு ஏற்பாடு செய்யும் என்றார்.

பன்னாட்டு அமைதி ஆய்வுமையப் பேராசிரியர் இந்திரா டி சொய்சா பேசும்போது, தமிழர்கள் தனி நாடு கேட்பதை ஏற்க முடியாது. மகிந்த சரியான முடிபு எடுக்கிறார். விடுதலைப் புலிகளுக்கு வெளி நாடுகளிலிருந்து பெரிய அளவில் நிதி கிடைப்பதால்தான் அவர்கள் போராடுகின்றனர் என்றார்.

சிங்களவர் தரப்பு வாதங்களை அடியோடு மறுத்து வை.கோ. ஆணித்தரமாகப் பேசினார். வை.கோவின் மறுப்பு உரையில், சிங்கள பௌத்த பிக்கு இங்கு தமிழ் ஈழம் வெறும் கனவு என்று கூறினார். கொசோவாவும் வெறும் கனவுதான் என்று உலகில் பலரும் கேலியாக பேசினார்கள். ஆனால் நடந்தது என்ன? கொசோவா சுதந்திர நாடாக ஆனது. இந்த மாநாடு நடக்கிற நோர்வே நாடு எதற்காக சுவீடனில் இருந்து பிரிய வேண்டும். தனிநாடாகாமல் நீடித்து இருக்கலாமே.

(இதனைச் சொன்னவுடன் கைதட்டல் எழுந்தது) அதுபோல தமிழ் ஈழமும் மலர்ந்தே தீரும். தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிக்கப்படும் என்று இங்கு சொன்னார்கள். கடந்த காலத்தில் இப்படிச் சொல்லித்தான் தமிழர்களை ஏமாற்றினார்கள்.

1948இல் பிரித்தானியர்கள் வெளியேறியவுடன் இலங்கையில் சிங்கள அரசு செய்த முதல் அக்கிரமம், 10 இலட்சம் இந்திய வம்சாவளித் தமிழர்களின் குடியுரிமையை பறித்ததுதான். நாடாளுமன்றத்தில் தமிழ்ப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையைக் குறைக்கவே இந்த அநீதி இழைக்கப்பட்டது.

அதன் பிறகு தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிப்பதாகக் கூறி 1957இல் செய்யப்பட்ட பண்டாரநாயக்க-செல்வநாயகம் ஒப்பந்தமும் 1965 இல் செய்யப்பட்ட டட்லி சேனநாயக்கா -செல்வநாயகம் ஒப்பந்தமும் சிங்கள அரசால் தன்னிச்சையாக கிழித்து எறியப்பட்டன.

1987இல் கைச்சாத்திடப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் வடக்கு-கிழக்கு மாகாணங்களை ஒரே பகுதியாக இணைப்பது என்றும் அதற்கு அங்கே பொதுமக்கள் வாக்கெடுப்பு நடத்துவதென்றும் உறுதியளிக்கப்பட்டது.

ஆனால் அந்த ஒப்பந்தத்தின் மை காய்வதற்கு முன்பாகவே இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனா வடக்கு-கிழக்கு இணைப்பை எதிர்ப்பேன் என்று கூறினார்.

இலங்கைப் பிரச்சினையில் அப்படியான் ஒரு உண்மையை இங்கு அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும். இஸ்ரேலின் மேற்குக் கரையில் பாலஸ்தீனியர்களுக்கு எதிராக யூதர்களை குடியமர்த்திய இஸ்ரேல் அரசு போலவே தமிழர்களின் பூர்வீகத் தாயகப் பகுதிகளில் சிங்களவர் குடியேற்றத்தை இலங்கை அரசு செய்தது. பலாத்காரமாக செய்துவந்துள்ளது.

குறிப்பாக கிழக்குப் பிரதேசத்தில்பெருமளவில் சிங்களவர்களைக் குடியேற்றியதோடு ஒற்றுமையாக வாழ்ந்துவந்த இந்துக்கள், முஸ்லிம்கள் இடையில் பிளவை ஏற்படுத்துகிறது. இப்போது கிழக்குப் பிரதேசத்தில் தனியாக தேர்தல் நடத்துவது ஒரு திட்டமிட்ட சதி.

80களில் பூட்டான் தலைநகரான திம்புவில் நடந்த பேச்சுவார்த்தையில் ஈழத்தமிழர்களின் தரப்பில் முன்வைக்கப்பட்ட அடிப்படைக் கோரிக்கைகளை ஏற்காவிட்டால் பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு இல்லை.

- தமிழர்களின் பகுதி அவர்களின் பூர்வீக தாயகம்.
- தமிழர்கள் தனித்தேசிய இனம். அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு.

ஆனால் இலங்கையின் மகிந்தவோ தமிழர் தாயகம் என்பதை ஏற்க முடியாது. இலங்கையில் ஒற்றையாட்சி முறைதான். கூட்டு ஆட்சி கிடையாது என்று மமதையோடு கூறிவிட்டார்.

இந்தப் பின்னணியில் தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வு கிடைக்கும் என்று எப்படி நம்ப முடியும். ஈழத் தமிழர்கள் இனி ஒரு போதும் ஏமாற மாட்டார்கள். இங்கு பேசிய அமைச்சர் தொண்டமானின் பாட்டனார் இந்திய வம்சாவழி தமிழர்களின் தலைவரான தொண்டமான் 1998இல் சென்னையில் என்னைச் சந்தித்தபோது ஒரு முக்கியமான செய்தியைச் சொன்னார்.

ஈழத்தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண ஒரு திட்டத்தை எழுதி அப்போதைய ஜனாதிபதி சந்திரிகாவிடம் கொடுத்துள்ளேன். அதில் ஒரு நாடு இருதேசங்கள் என்று இலங்கை நாட்டில் சிங்கள தேசம், தமிழர் தேசம் என்ற இரு தேசங்களை ஏற்படுத்தலாம்.

சீனா, ஹாங்காங் போல என்று குறிப்பிட்டதாகவும் அவர் தயாரித்துக் கொடுத்த திட்டம் அச்சாகி இருந்த அந்தத்தாளில் சந்திரிகா ஆர்வம் அளிக்கிறது என்று எழுதி இருந்தாராம்.

. இதனை என்னிடம் கூறியதோடு அந்தத் தாளின் பிரதியையும் என்னிடம் தந்தார். தமிழர்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்ற தன்னுடைய கவலையையும் என்னிடம் தெரிவித்தார். ஒரு நாட்டை பிரித்து இன்னொரு சிறிய நாட்டை உருவாக்கக்கூடாது என்றார்கள்.

அப்படியானால் பாகிஸ்தானிலிருந்து வங்கத்தேசத்தை ஏன் உருவாக்கினார்கள்? அப்படி உருவாக்க இந்தியா இராணுவ நடவடிக்கை எடுத்தது வரலாற்று உண்மை.

இங்கு வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் புலிகளுக்கு நிதிதருவதால் தான் போராடுகிறார்கள் என்று சிங்களவர் ஒருவர் கூறினார்.

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வந்து தாய் தந்தையர்களை பிரிந்து துன்பங்களை சுமந்து கொண்டு மாடாக உழைக்கும் ஈழத்தமிழர்கள் பத்து டொலர் இருபது டொலர் என்று சம்பளப் பணத்தில் ஒரு பகுதியை தங்கள் தாயக விடுதலைக்காக அனுப்புகிறார்கள்.

அங்கே இலங்கையில் தமது தாய் மண்ணை விடுவித்து உரிமையோடும் மானத்தோடும் வாழ தங்கள் உயிர்களை தாரைவார்த்துக் கொடுக்கிறார்கள்.

இதுவரை எண்பதாயிரம் தமிழர்கள், சிங்களவர்கள் செய்யும் இனப் படுகொலையால் கொல்லப்பட்டு உள்ளனர்.

இலட்சக்கணக்கான தமிழர்கள் பசிக்கு உணவு இன்றி, நோய்க்கு மருந்து இன்றி நாளும் மடிகிறார்கள். போர்நிறுத்தத்தை முதலில் அறிவித்தது புலிகள்தான். அதை முறித்ததற்கான முழுமுதற் காரணம் சிங்கள அரசுதான். இங்கு ஐரோப்பாவில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தையில் கொடுத்த வாக்குறுதியை சிங்கள அரசு நிறைவேற்றவில்லை.

எனவே இப்போது சமாதானப் பேச்சு வார்த்தை தொடங்க வேண்டுமானால் சிங்கள அரசு இராணுவத் தாக்குதலை நிறுத்துவதாக அறிவிக்க வேண்டும். பேச்சுவார்த்தைக்கு தயார் என்று சொல்ல வேண்டும்.

விடுதலைப்புலிகளைச் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு நோர்வே அரசும், ஐரோப்பிய ஒன்றியமும் அழைக்கவேண்டும். மருந்தும் உணவும் இன்றி பரிதவிக்கும் ஈழத்தமிழர்களுக்கு உணவும் மருந்தும் கொடுக்க உலக நாடுகள் முன்வர வேண்டும் என வை.கோ. பேசினார்.

இந்த விவாத மேடை மாலை நான்கு மணி வரை நீடித்தது. மாநாட்டை முடித்து வைக்கும் போது ஈழத்தமிழர்கள் பிரச்சினை விவாத மேடைக்கு தலைமை தாங்கிய எரிகா மான் அம்மையார் பேசுகையில்,

இப்பிரச்சினை குறித்து காரசாரமான விவாதம் நடந்தது. மோதல் நிறுத்தப்பட்டு சமாதானம் ஏற்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதில் இலங்கை-அரசுக்கும் பொறுப்பு இருக்கிறது என்று கூறினார்.

### ஒஸ்லோ மாநாட்டின் வேண்டுகோள்

மாநாடு நிறைவு அடைகிறது என்று பண்டிட் ரவிசங்கர் கூறியபோது, வை.கோ. எழுந்து நின்று இரண்டு நிமிடம் நான் பேச அனுமதி கோருகிறேன் என்றார். அனுமதி வழங்கப்பட்டது.

யுத்தம் நின்று அமைதியும் சமாதானமும் மலரவேண்டும் என்ற தூய்மையான நோக்கோடு இம்மாநாட்டை கூட்டினீர்கள். இம்மாநாட்டை ஒஸ்லோ மாநாட்டின் வேண்டுகோள் என்று அறிவியுங்கள்.

அதில் ஆயுத மோதலை விட்டு விட்டு சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்கு வருமாறு சிங்கள அரசுக்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கும் அழைப்பு விடுப்பதாக இம்மாநாட்டின் வேண்டுகோள் அமையட்டும். அமைதிக்கு வழி பிறக்கட்டும் என்று வை.கோ. கூறியபோது அரங்கம் முழுவதும் பலத்த கை தட்டல் எழுந்தது.

தொடர்ந்து பண்டிட் ரவிசங்கர் பேசுகையில், சண்டையை நிறுத்தி விட்டு சமாதானத்திற்கு வாருங்கள் என்றுதான் இருதரப்பிற்கும் இம்மாநாடு வேண்டுகோள் வைக்கிறது.

புல்லாங் குழல் இசையோடு மாநாடு முடிந்தது. இம்மாநாட்டில் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் சுவிட்சர்லாந்து, ஜேர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ், போலந்து நாட்டுப்பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

(ந-5)


வடமராட்சி ,தென்மராட்சி பிரதேசத்திற்கான
யூனியன் அஷ்யூரன்ஸின்
மாபெரும் வேலை வாய்ப்பு!

உங்கள் பிரதேசங்களிலேயே எங்கள் நேர்முகத் தேர்வுகள்

**ஆயுள் காப்புறுதி (LIFE INSURANCE )**

1. காப்புறுதி ஆலோசகர் (INSURANCE ADVISOR)
2. காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர் (INSURANCE DEVELOPMENT OFFICER)
3. ASSISTANT AGENCY DEVELOPMENT MANAGER
4. AGENCY DEVELOPMENT MANAGER

**பொதுக் காப்புறுதி (GENERAL INSURANCE)**

1. காப்புறுதி ஆலோசகர் (INSURANCE ADVISOR)
2. இளநிலை விற்பனை அதிகாரி (JUNIOR SALES EXECUTIVE)
3. விற்பனை அதிகாரி (SALES EXECUTIVE)

**கல்வித் தகைமைகள்**

1. G.C.E (O/L) கணிதம் உட்பட ஆறுபாடங்களில் சித்தி (ஆகக்குறைந்தது)
2. காப்புறுதி துறையில் முன் அனுபவம் விரும்பத்தக்கது.(ஆனால் முக்கியமல்ல)
3. உயர் பதவிகளுக்கு மேலதிக தகைமைகள் எதிர்பார்க்கப்படும்(ஆயுள் காப்புறுதி - பதவி இலக்கம் 3,4/பொதுக்காப்புறுதி-பதவி இலக்கம் 3)

**வேலைவாய்ப்பின் மூலம் பெறக்கூடிய நன்மைகள்**

1. அதியுயர் சம்பளம் பெறக்கூடிய அரிய வாய்ப்பு
2. ஆறுமாத காலத்தில் அதீத திறமையுடன் வேலை செய்பவர்கள் நிரந்தர வருமானத்திட்டத்திற்குள் உள்வாங்கப்படுவார்கள்
3. வெளிநாட்டு சுற்றுலாவிற்கான அரியவாய்ப்பினைப்பெற்றுக்கொள்ளல்
4. இலகு தவணை முறையில் வாகனக்கடன் வசதிகள்
5. வருடாவருடம் விருதுகளைப் பெறும் வாய்ப்பு
6. உங்கள் திறமைகளுக்கு ஏற்ற வகையில் விரைவான பதவி உயர்வுகள்

**வடமராட்சியில் நேர்முகத்தேர்வு நடைபெறும்**
இடம்:- நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்
காலம்:-14.04.2008 திங்கட்கிழமை
நேரம்:-மு.ப.9.30 மணி

**தென்மராட்சியில் நேர்முகத்தேர்வு நடைபெறும்**
இடம்:- சாவகச்சேரி இந்துக்கல்லூரி
காலம்:-15.04.2008 செவ்வாய்க்கிழமை
நேரம்:-மு.ப.9.30 மணி

அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

(சி/987)



**R.V.A INTERNATIONAL MARRIAGE BUREAU**

வெளிநாட்டில் வசிக்கும் PR உடைய றோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த 1975-1985க்கு உட்பட்ட ஆண்கள், பெண் களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வசிக்கும் மணமகன்,மணமகள் தேவை. விண்ணப்பிக்க விரும்புவோர் எம்முடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

ராஜா மாதா திருமண சேவை
இல.70, பழைய பூங்கா வீதி,
கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.
T.P:- 0779564944

(1051)



**விற்பனைக்கு**

வட்டுக்கோட்டையில் பிரதான வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய இரு கடைகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு:-
க.சுந்தரமூர்த்தி,
பிரதான வீதி,
சங்கரத்தை சந்தி,
வட்டுக்கோட்டை.

(1089)





உ
பாலகணபதி துணை
அல்வாய் சாமணந்தறை
ஆலடிப்பிள்ளையார் கோவில் மஹோற்சவம்
3ஆம் நாள் மதுரத் திருவிழா
(13.04.2008)

இனியான் இனிப்பினை பிரியான் இன்சுவைக்க
கனிமுகரும் மூஷீகமேறும் கஜமுகன் - தணிதமாய்
கண்ணொளி படரும் கருணைக் கடலவன்
இன்னா அணுகாது இணையிருப்பான்

கன்னல்கனி அப்பம் அவல் பொரிவிரும்பியே
இன்முகத்தில் ஈடில்லாக் கருணைகாட்டும்
சின்னக்கரிமுகனே சீலமிகும் ஆலடியானே
ஆலின்நிழல் ஆறும் கணபதியே
உன்னை நினைந்தடியார் நித்தமும் நோன்புறுவர்
நீடுநலந் தருவான் நாதன் நீயென்றே
அன்னையின் அன்புகாட்டி தந்தையுமாகி நிற்கும்
தும்பிக்-கை முகத்தவனே துன்பநிலை போக்கிடுவாய்

அல்வாயூர் சி.சிவநேசன்

(1052)

# சித்திரைப் புத்தாண்டு சிறப்பு மலர் -2008




புதுவருட கொடுக்கல் வாங்கல் சம்பிரதாயத்தின் முன்னோடிகளான
மக்கள் வங்கியிடமிருந்து இம்முறையும், கொடுக்கல் வாங்கல் செய்யும்

அனைவருக்கும் பெறுமதியான புதுவருட பரிசு

ரூ.20.000/-த்திற்கு பெறுமதியான சுவர்க்கடிகாரம்

ரூ.15.000/-த்திற்கு அழகான குடை

அனைத்து கொடுக்கல் வாங்கல்களுக்கும் பரிசு

புது வருட கொடுக்கல் வாங்கல்களுக்காக ஏப்ரல் 14ஆம் திகதி காலை 7.00மணி முதல் அனைத்து மக்கள் வங்கிக் கிளைகள், அடகு மற்றும் சேமிப்பு சேவை நிலையங்களும் உங்களுக்காக திறந்திருக்கும்.

வாருங்கள் எமது சுபநேர கொடுக்கல் வாங்கல் பரிசை எடுத்துச்செல்லுங்கள்

※ 13.04.2008 ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணி 29 நிமிடத்தில் புதுவருடம் பிறப்பதாக திருக்கணிதப்பஞ்சாங்கம் கூறுகின்றது. வாக்கியப்பஞ்சாங்கம் பி.ப.4மணி 56 நிமிடத்தில் சர்வதாரி வருடம் பிறப்பதாகச் சொல்கின்றது.

※ சிவப்பு நிறப்பட்டாடை அல்லது சிவப்புக்கரை வைத்த புதிய ஆடைகளை தரித்தல் சிறப்பானது.

※ கைவிசேடம் பெறுதல் - 14.04.2008 பகல் 12 மணி 26 நிமிடம் தொடக்கம் பி.ப 2மணி 42 நிமிடம்

※ குரு, இராஜ, பிரபு தரிசனம்-16.04.2008 6மணி 5 நிமிடம் தொடக்கம் 7மணி 36 நிமிடம் அல்லது 11 மணி 50 நிமிடம் தொடக்கம் 12 மணி 23 நிமிடம்.

(சி.983)

மக்கள் மயமாகிய வங்கி
மக்கள் வங்கி

www.peoplesbank.lk


## தமிழர்களின் வாழ்வியல் பண்பாட்டை வெளிப்படுத்தும் புத்தாண்டு

புது வருடப் பண்டிகை சமூக விழா வாக மாத்திரம் அமையாது சமயவிழாவாகவும் விளங்குவதில் தான் அதன் சிறப்புத் தங்கியுள்ளது. புதுவருடம் பிறப்பதற்கு முன்னும் பின்னும் குறிப்பிட்ட ஒரு காலப் பகுதியை புண்ணிய காலம் என்பர். இப் புண்ணிய காலத்தில் இறைவனை நினைத்து சங்கற்பித்து மருத்துநீர் தலையில் தேய்த்து நீராடி புத்தாடை தரித்து கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்து குரு, பெற்றோர், பெரியோர் ஆகியோரை வணங்கி அவர்களின் ஆசி பெற்று இயன்ற தான தர்மங்களைச் செய்தல் வேண்டும்.

புது வருடம் பிறக்கும் நேரத்தைச் சோதிடர்கள் கணித்துக் கூறுவர். குறித்த அந்த வேளையில் குத்துவிளக்கு ஏற்றி நிறைகுடம் வைத்து புத்தாண்டை வரவேற்பது மரபு. அதிகாலையில் நித்திய,நைமித்திய, கர்மானுஷ்டானங்களை முடித்து தத்தம் இல்லங்களில் குடும்பத்தவர் சகிதம் சூரியனுக்குப் பொங்கல், பூசைகள் செய்வது இந்துக்களின் வழக்கம்.


சுபநேரத்தில் கைவிசேஷம் நடைபெறும். கைவிசேஷம் என்பது வெற்றிலையில் நெல் அல்லது பச்சையரிசியிட்டு அதன் மீது காசு பணம் வைத்து குடும்பத் தலைவன் தமது குடும்பத்தவருக்கு வழங்குதல் என்பதைக் குறிக்கும். கைவிசேஷம் பெரியவர்களிடம் பெற்ற பின்னரே கொடுக்கல் வாங்கல்கள் ஏனையவர்களிடம் செய்யப்படும். விருந்துண்ணல், குரு, பெரியவர்கள் தரிசனம், நண்பர்கள் சந்திப்பு என்பன யோகம் நிறைந்த சுபவேளையில் நிகழும்.

மதுரகவி காரை.
எம்.பி.அருளானந்தன்

எந்த வேலையையும் நல்ல நாள் முகூர்த்தம் பார்த்து சுப வேளையிலேயே புது வருடத்தில் தெய்வத்தை நினைத்துத் தொடங்கும் பாரம் பரியம் கடைப்பிடிக்கப்படுகிறது. இவை அனைத்தும் வெறும் சம்பிர தாயங்கள், அர்த்தமற்ற சடங்குகள் என்று கருதிவிடக்கூடாது. இவற் றுக்குப் பின்னால் பல அர்த்தங்கள் உண்மைகள் உண்டு.

இவற்றால் மனிதர்கள் புத்துணர்வும் மகிழ்ச்சியும், புதுத்தென்பும் பெறுகின்றார்கள். வாழ்க்கையில் பிடிப்பும் நம்பிக்கையும், திருப்தியும் அடைகின்றார்கள்.

இவையே இதற்குச் சான்று கூறப்போது மானவை. புது வருடத் தில் பரிமாறிக் கொள்ளப்படும் மனப்பூர்வ மான நல் வாழ்த்துக்களும்; நல்லெண்ணங்களும் வாழ்வில் அமைதியையும் சாந் தியையும் தரும் என்பது திண்ணம். எல்லோரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழவும் மலர்ந்துள்ள சர்வதாரி வருஷம் வழி காட்ட வேண்டும்.



### சித்திரைப் புத்தாண்டே ....

சேர்த்துச் சேர்த்து வைத்த காசு பணம் எல்லாம்
சீனி அரிசிக்குப் போயாச்சு – மனைவி
கோர்த்துக் கோர்த்துக் கழுத்திலே கட்டிய
தங்க நகைகளும்; வித்தாச்சு
வேர்த்து வேர்த்து வழிய உழைச்ச உழைப்பெல்லாம்
வீணடிப்பே ஏதும் மிஞ்சமில்லை
சாத்திரத்தில் நல்ல வரவிருக்காம் – அதைப்
பார்த்திருப்பேன் இந்தப் புத்தாண்டே

கா.கார்த்திகேசு.

### சிறப்பான வாழ்வு தந்துவிடு புத்தாண்டே!

இனிய புத்தாண்டே வருகவே –நாம்
ஏற்றம் காணவருகவே
சித்திரைப் புத்தாண்டே வருகவே
சிறப்பான வாழ்வு நமக்குத் தருகவே
பூத்தூவி வரவேற்கின்றோம்
புயலாக நீயும் வருகவே
இருகரங் கூப்பி வரவேற்கின்றோம்
இனிதாய் நீயும் வருகவே!

செ.ரவிசாந் -குப்பிளான்.

### அருள் மழைத் தாரை நீ சொரிகுவையே!

சிரிக்கும் மழலையும் சீரடி வைத்துவாழ
பூவிரிக்கும் குழவியரும் பொற்புடன் வாழ
கோல்விரிக்கும் கிழவர்களும் குதூகலமாய் வாழ
குடைவிரிக்கும் மன்னர்களும் குடிகளும் வாழ
கலைவிரிக்கும் கலைஞர்களும் கவினுற வாழ
கடைவிரிக்கும் வணிகர்களும் கவலையின்றி வாழ
அகல்விளக்காய் வரு சித்திரைப் புத்தாண்டே
அருள் மழைத் தாரை நீ சொரிகுவையே!

கலாபூஷணம் மு.தணிகாசலம்
கற்கோவளம்.

### சர்வதாரியே நீ செய்வாய்

சித்திரபானு வருடமே நீ
புரிந்துணர்வை கொண்டு வந்தாய்
சுபானு வருடமே நீ
ஒற்றுமையாக வாழ வழி சமைத்தாய்
தாரண வருடமே நீ
சுனாமிபேரலையை கொண்டுவந்தாய்
பார்த்தீப வருடமே நீ
அச்சத்தை தோற்றிவித்தாய்
விய வருடமே நீ
சிங்கள–தமிழ் ஒற்றுமையைக்குலைத்தாய்
சர்வசித்து வருடமே நீ
மனிதஅவலத்தைதோற்றுவித்தாய்
சர்வதாரி வருடமே நீ
என்ன செய்யப்போகிறாய்
நல்லது செய்வாயா! நம்பிக்கைதருவாயா!

விநாயகன் டினேஸ்கரன்
நெடிய காடு- வல்வெட்டித்துறை.

# சித்திரைப் புத்தாண்டு சிறப்பு மலர் -2008



## கைவிசேட பாரம்பரியம்

தமிழர் புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் "கைவிசேட கொடுக்கல் வாங்கல்" முக்கியமான விடயமா கும்.

முன்னைய காலத்தில் புத் தாண்டு பிறந்ததும் கைவிசேடத் துக்கான சுப நேரம் வந்ததும் வீட்டின் குடும்பத் தலைவன் தமிழ் மரபின்படி வெற்றிலையில் நாணயத்தை வைத்து மனைவிக்கு கைவிசேடம் கொடுக்க, மனைவி கணவனின் காலடியில் பணிந்து வணங்கி கைவிசேடம் பெறுவார்.

இல்லத்தை வளமாக்கி, பிள்ளைகளை வளர்த்தெடுக்கும் மனைவிக்கு மேலும் வாழ்க்கையில் மேன்மைகள் பெறவும் மனை விக்கு கைவிசேடம் கொடுக்கிறார். தமிழ் மரபின்படி, மனைவியும் கணவனின் மேன்மைக்காக கணவனை வாழ்த்தி கைவிசேடம் கொடுப்பார்.

தந்தையும் தாயும் சேர்ந்து நிற்க இல்லத்தில் அனைவரும் ஒவ்வொருவராக வணங்கிக் கை விசேடம் பெறுவார்கள். புதுவருட மன்று குலதெய்வ வழிபாடு செய்து பெரியோர்களிடம் ஆசி பெறுவது நன்மைதரும் என்பது ஐதீகம்.

இவைபோன்ற புத்தாண்டுப் பழக்க வழக்கங்களை சுப நேரத் தில் உரிய முறையில் தமிழர் பின் பற்றி பேணிப் பாதுகாத்து வருகி றார்கள்.

எங்கள் மரபுகளை
என்றென்றும் பின்பற்றுவோம்!

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

# தமிழகத்தில் மாற்றப்பட்ட புதுவருடப் பிறப்பு இலங்கையிலும் மாற்றத்தை ஏற்படுத்துமா?

இலங்கையிற் தமிழ் மக்களுக்கும், சிங்கள மக்களுக்குமிடையே அரசியல் வாதிகள், ஆட்சியாளர்கள் பல்வேறு கருத்து வேற்றுமைகளையும், பிரச்சினைகளையும் தொடர்கதையாக வளர்த்துக் கொண்டு வந்தாலும் சில சமய கலாச் சாரப்பண்பாடுகள் தமிழ் சிங்களமக் களைப் பிரியவிடாது சகோதரத்துவ உணர்வுடன் பல்லாண்டுகளாகவே இந் நாட்டில் வாழவைத்துள்ளது.

### சித்திரைப் புத்தாண்டே வருக!

புத்தாண்டே வா என்று அழைப்ப தாலா
புதியதினம் பிறக்கிறது? காலமென்னும்
புத்தகத்தின் பக்கமதோ வினாடி தோறும்
புரண்டபடி இருக்கிறது ! இனியே லேநாம்
சித்திரைக்குச் சொற்சதங்கை அணிவிக் காமல்
சிந்தனையில் புதுச்சலங்கை ஒலியைக் கேட்போம்
உத்தரவை நமக்கே நாம் இட்டுக்கொண்டால்
உருவாகும் நாளனைத்தும் புத்தாண் டாகும்!

பருவங்கள் சுழற்சியிலே ஆகும் போகும்
பழம் உதிரும்! விதை பதியும்! செடிகள் தோன்றும்
புருவத்தைச் சுருக்காமல் விரிக்காமல் நாம்
புவனத்தைப் படிப்பதற்குக் கற்றுக் கொண்டால்
உருவங்கள் மாறிவிடும் ! உள்ளே தூங்கும்
உயிர் மட்டும் கண்ணுக்குத் தெரியும்! அந்த

புலவர் செ.பரமநாதன்

இந்தவிதத்திலே சித்திரை வருடப் பிறப்பு இலங்கையில் தமிழ் சிங்களப் புத்தாண்டு எனப் பெருமையுடன் கொண் டாடப்பட்டு வருகின்றது. இந்தப்பெருநாளைத்தமிழ் மக்களும், சிங்களமக்களும் மேடராசியிற்சூரியன் பிரவேசிக்கும் காலமாகச் சோதிடரீதியி லும் வருடத் தின்சிறப்புமிகு முதன்மாத மாகக் கொண்டாடி வருகின்றார்கள். இந்த தமிழ்சிங்கள புதுவருட நன்நாளில் தமிழ் மக்களும், சிங்கள மக்களும் சுபநேரம் பார்த்து தத்தம் கருமங்களை எல்லாம் செய்து எல்லோருடனும் அன்பு பாராட்டி மகிழ்வுடன் விருந்துண்டு களிப்பார்கள்.

இத்தகு ஒற்றுமைமிக்க நல்லதொரு பெருநாள் இலங்கையில் எதிர் காலத்திலும் தொடருமா? எனும் சந்தேகம் தற்போது இலங்கை மக்களிடையே கேள்விக் குறியொன்றை ஏற்படுத்தியுள் ளது. இதற்குக்காரணம் தமிழக அரசு தமிழ்ப் புத்தாண்டைத் தைத்திங்கள் முதலாம் நாளாக 2008ம் ஆண்டிலிருந்து பிரகடனப்படுத்தியுள்ளதாகும்.

### நீர்வை மணி

இலங்கையும் இந்தியாவும் பல் வேறு வழிகளிலும் மிகமிக நெருங்கிய கலாசாரப்பண்பாட்டுத் தொடர்புடைய னவாகவும் இந்தியாவில் குறிப்பாகத் தமிழ் நாட்டில் ஏற்படக்கூடிய அரசியல் பண்பாட்டுக் கலாசார மாற்றங்களால் இலங்கையிலும் சாதக, பாதக நிகழ்வுகள் தொன்று தொட்டே ஏற்படுவன வாயுள்ளது.

எனினும் தமிழிநாட்டு ஆட்சியாளர்களும் இந்திய நடுவன்அரசும் இலங்கைத் தமிழரின் துன்பியல்களைக் கண்டும், கேட்டும், பார்த்தும் கூட எவ்விதசலனமுமில்லாதிருப்பதினால் தமிழகத்தின் புத்தாண்டு மாற்றமும் இலங்கையிற் பிரதிபலிக்க வாய்ப்பில்லை எனலாம்.

தமிழக அரசும், இந்திய நடுவன் அரசும் இலங்கைத் தமிழர் பாற் கரிசனை காட்டுமானால் இலங்கைத் தமிழரும் சிங்கள தமிழ்ப்புத்தாண்டு எனும் பிணைப்பை அறுத்துக்கொண்டு தைத்திங்களே தமிழர் புத்தாண்டு என்பதை ஏற்றுக்கொள்வார்கள் என்பது வரலாறு எடுத்துக்காட்டும் ஏற்புடையதொரு செயற்பாடாகும்.

இன்றைய இலங்கைத்தமிழர்களின் நிலையில் தமக்கெனத் தனியான கலாசாரப்பண்பாடுகளைக்கட்டிக்காக்க வேண்டிய உணர்வுகள் மேலோங்கியிருப்பினும், இந்த நாட்டின் அரசியல் சமு தாயப் போக்கிற் தமிழ்சிங்களப் புத் தாண்டாக இதுவரை காலமும் கொண்டா டப் பட்டு வந்த சித்திரைப் புது வருடம்தைத் திங்கள் நாளுக்குமாறுவது பலவித நெருக்கடிகளுக்கும் இடமளிக்கலாம்.

மேலும் இந்த நாட்டின் பலதுறைப்பட்ட கலாசாரப்பண்பாடுகளுக்கெல்லாம் வழிகாட்டியாகவும், பின்பற்றலாகவும் இருந்து வரும் தமிழ்நாடும், பாரததேசமும் இலங்கையில் ஏற்பட்டுள்ள இனச் சீரழிவுகளைப் பார்த்துக்கொண்டு ஏனோ தானோ என்றிருக்கும்வரை இந் நாட்டு மக்களும் பாரததேசத்தை நன் நோக்குடன் பார்க்கவோ, அதன் போக்கு களை அனுசரிக்கவோ பின் வாங்குவதன்றி வேறு வழியில்லை எனலாம்.

எனவே இலங்கை மக்கள் அனைவரும் சித்திரைப்புத்தாண்டைக் கொண்டாடுவதன்றி வேறுவழியில்லை.

### புது வருடம்

இன்னல்கள் பலவின் நடுவே
இனிதாய் உதிக்குது புது வருடம்

இஷ்ட தெய்வம் கந்தனவன்
இரக்கம் காட்டிடுவான் புதுவருடத்தில்

இணையற்ற சுகம் தனை
இதயத்தில் நாட்டி விடுவான் புது வருடத்தில்

இத்தனை நாள் துன்பமெல்லாம்
இரவோடு ஓடிவிடும் புது வருடத்தில்

இனிய சமாதான வாழ்வு அது
இனி வரும் புது வருடத்தில்

சி.அபிராமி, பிரான்ஸ்.

### 'சர்வதாரி' யே சாந்தி தருக!

சர்வ மக்களும் சிறப்புடன் வாழ
சர்வ காலமும் உனையே போற்ற
சர்வ தாரிநீ சாந்தி தாரியாய்
சர்வ நலன்களும் தந்திட வருவாய்!

ப.மகேந்திரதாசன்
நாயன்மார்க்கட்டு.

# சித்திரைப் புத்தாண்டு சிறப்பு மலர் -2008

## புதுவருடத்தின் மரபுகள் ஐக்கியத்தை ஏற்படுத்தும்

### புத்தாண்டுச் செய்தியில் ஜனாதிபதி

(கொழும்பு)

ஐக்கியத்தையும் சுபீட்சத்தையும் கொண்டு வருகின்ற சிங்கள-தமிழ் புது வருடத்தை நாம் மிக மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம்.



விவசாயமும் அது உருவாக்கிய வளமும் புது வருடத்திற்கு பிறப்பைக் கொடுப்பதை நாம் அறிவோம். கடந்த காலங்களில் எமது அரசாங்கம் மேற்கொண்ட பிரதான நடவடிக்கையாதெனில் விவசாயத்தை சக்தி பெறச் செய்வதனூடாக, நிலத்தின் வளத்தை உறுதிப்படுத்த அர்ப்பணித்தமையாகும். இதன் மூலம் தேசம் விசேடமான அடைவுகளை பெற்றது என்பதை நாம் அறிவோம். எனவே தேசம் அதன் கௌரவத்தை உணர்ந்து கொண்ட சந்தர்ப்பத்தில் இப்புது வருடம் உதயமாகியிருப்பது மகிழ்ச் சியைத் தருகின்றது.

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த புத் தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார். அச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இரு தசாப்தங்களுக்கு மேலாக பயங்கர வாதத்தினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்கள் இப் புதுவருடத்தை தமது குடும்பங்களுடன் சந்தோஷமாக கொண்டாடுவதைக் காண்பது மகிழ்ச்சியை அளிக்கின்றது. நாம் ஒன்றிணைந்து புதுவருட சம்பிரதாயங்களில் ஈடுபடுவது தேசத்தை பலப்படுத்துவதற்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

புது வருடத்தின் மரபுகளையும் சம்பிரதாயங்களையும் பேணுவதன் மூலம் ஏற்படுகின்ற ஐக்கியம், சகோதரத்துவம் என்பன நாட்டின் சுபீட்சத்திற்கு வழியமைக்கின்றது. இந்த எதிர்பார்ப்பை மதித்து இம்முறை புதுவருடத்தை சம்பிரதாய பூர்வமாக பின்பற்றுவதற்கு அனைவரும் ஒன்றுபடுவார்கள் என்பது எனது நம்பிக்கையாகும். பண்டிகைக் காலங்களில் மதுபானம் அருந்துவதிலிருந்து விலகி புதுவருடத்தைக் கொண்டாடுவதன் மூலம் எதிர்கால சந்ததியினருக்கு முன்மாதிரியாக இருக்கும் படி நான் நாட்டு மக்கள் அனைவரிடமும் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

நாட்டினதும் மக்களினதும் பாதுகாப்புக்காக புதுவருட காலத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கிற முப்படையினர், பொலிஸாருக்கும் ஏனைய கடமைகளில் ஈடுபட்டுள்ள அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**உங்கள் அனைவருக்கும் எனது புது வருட நல்வாழ்த்துக்கள்!**

## சமாதானம், சௌபாக்கியம் நிறைந்த ஆண்டாக மலர வேண்டும்

### யாழ். படைத்தளபதியின் வாழ்த்துச்செய்தி

தமிழ்-சிங்கள புத்தாண்டை முன்னிட்டு யாழ் பாதுகாப்புப்படைகளின் தளபதி என்ற முறையில் உங்களுக்கு புத்தாண்டு வாழ்த்துத்தெரிவிக்க கிடைத்த இந்த சந்தர்ப்பமானது எனக்குக்கிடைத்த பாக்கியமாகவே கருதுகிறேன்.

2008ஆம் ஆண்டில் உதித்த இந்த தமிழ்-சிங்கள புத்தாண்டு உங்களுக்கு சமாதானத்தையும் மகிழ்வையும் கொண்டுவரும் ஆண்டாக வேண்டும் என்று முதலில் பிரார்த்திக்கின்றேன் . தமிழ் -சிங்கள இனத்தவர்களான எமது பிரதான கலாசார நிகழ்வுகளில் ஒன்றான தமிழ் ,சிங்களப்புத்தாண்டை கொண்டாடும் இத் தருணத்தில் ஒரே இனமாக எழுந்திருக்க திடசங்கற்பம் கொள்வோம்.

பல வருடங்களாக யுத்தத்திற்குள் சிக்குண்டிருந்து தற்போது சமாதானத்துடன் சுதந்திரமாக வாழ்ந்துகொண்டிருக்கும் யாழ் .குடாநாட்டு மக்களான உங்களுக்கு கடந்த ஆண்டைவிட இவ்வருடம் அமைதியான முறையில் புதுவருடத்தைக் கொண்டாட சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. அதற்காக பாதுகாப்புப் படையினராகிய நாம் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டதுடன் உங்கள் அத்தியாவசிய சேவைகளை முன்னர் இருந்ததைவிட மேலும் விஸ்தரிப்பதற்கு அர்ப்பணிப் புடனும் உயிர்த்தியாகத்துடனும் செயற்படுவதை இச்சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

யாழ் .குடாநாட்டில் வாழும் உங்களைப் போன்று கிழக்குப்பிரதேசத்தில் உங்கள் உறவுகளும் இம்முறை தமிழ், சிங்களப்புத்தாண்டை கொண்டாட பாதுகாப்புப்படையினர் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட விதத்தில் அடுத்த ஆண்டு வன்னியில் இருக்கும் உங்கள் சகோதரர்களுடன் தமிழ், சிங்களப் புத்தாண்டைக்கொண்டாட பாதுகாப்புப் படையினர் மேலும் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார்கள் என்பதை இச்சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். கிழக்குப்பகுதி மக்களைப்போன்று வன்னிப்பகுதி மக்களையும் பயங்கரவாத பிடியிலிருந்து மீட்டு ஜனநாயக ஒற்றையாட்சிக்குள் உங்கள் அனைவருக்கும் சுதந்திரமாக மகிழ்வுடன் வாழக்கூடிய உரிமையை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு பாதுகாப்புப் படையினர் எப்போதும் செயற்பட்டு வருகின்றனர்.

யாழ்.பிரதேசத்தில் அத்தியாவசியப்பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கு வதில் பாதுகாப்புப்படையினருடன் கைகோர்த்துதவி பொறுப்புடனும் அர்ப்பணிப் புடனும் கடும் முயற்சியுடனும் தமது பொறுப்பை உணர்ந்து செயற்பட்டு வரும் அர சாங்க அதி காரிகள், ஊழியர்கள் மற்றும் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் எனது பாராட்டை தெரிவித்துக்கொள்வதற்கும் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள் கின்றேன்.

இம்முறை தமிழ், சிங்களப்புத்தாண்டை மக்கள் கொண்டாடுவதற்காக நீங்கள் மேற்கொண்ட சேவையானது அளப்பரியது. அரசாங்க உத்தியோகத்தர் களான நாம் மக்களுக்கு கௌரவமான சேவையை வழங்கவேண்டியது எமது பொறுப்பாகும். பொறுப்புடன் நாம் வழங்கும் சேவையானது மக்கள் மனங்களில் நிரந்தரமாக நிலைத்திருக்கும். மக்களுக்கு பாதுகாப்புடன் சுதந்திரமாக வாழக் கூடிய சூழலை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு பாதுகாப்புப் படையினர் எப்போதும் செயற்படுவதுடன் அவற்றை வெற்றிகரமாக மேற்கொள்வதற்காக உங்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஒத்துழைப்புகளுக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இனி வரும் காலங்களிலும் உங்கள் ஒத்துழைப்பை பாதுகாப்புப்படையினருக்கு குறைவின்றிக்கிடைக்கும் என்று நம்புகிறேன். மேலும் இன, மத, மொழி பேதமின்றி ஒற்றுமையுடன் இந்த கலாசார வைபவத்தினை நாம் கொண்டாடுவது போன்று எதிர்காலத்தில் பிரிக்கமுடியாத இனங்களாக நாம் ஒன்றிணைய வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன். ஆகவே உதித்த இந்த புத்தாண்டு உங்கள் அனைவருக்கும் உங்கள் குடும்பத்தவர்கள் அனைவருக்கும் சமாதான சௌபாக்கியம் நிறைந்த எதிர்பார்ப்புகள் நிறைவேறும் ஆண்டாக வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன் என அந்த வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


அன்பர்கள் ,நண்பர்கள், வாடிக்கையாளர்கள் ,
அனைவருக்கும் 'சர்வதாரி' சித்திரைப் புத்தாண்டு சகல வளங்களையும் வழங்கி சிறப்புற எமது நல்வாழ்த்துக்கள்.

HNB PATHUM VIMANA

120 ஆண்டுகளை நிறைவு செய்கின்ற HNB பெறுமதிமிக்க பரிசில்களுடன் உங்களை வரவேற்கிறது. இதனைக் கொண்டாட HNB பத்தும் விமன 2008 மூலம் 12000 பரிசுகளை வழங்குகிறது.

வருட இறுதி பிரிமியம் சீட்டிழுப்பு மூலம் கொழும்பு மத்தியில் ஆடம்பர வீடு

வருட இறுதி மாபெரும் சீட்டிழுப்பில் சிங்கப்பூருக்கான 50 விமானப் பயணச் சீட்டுகள்

வருட இறுதி மாபெரும் சீட்டிழுப்பில் மகத்தான மிற்சுபிஷி மொண்டெரோ ஜீப்

வருட நடுப்பகுதி பிரிமியம் சீட்டிழுப்பில் கவர்ச்சியான அவுடி A4 கார்

ஏப்ரல் ஜூன் செப்டெம்பர் மாதங்களில் 3 டொயோட்டா அவென்ஸா கார்கள்.

HNBபத்தும் விமன TV Game Show ரு 5000 முதல் ரூ.100 000 வரையான பணப்பரிசுகள்.

இன்றே விரைந்து HNB யுடன் சேமிப்பு, நடைமுறைக் கணக்குகளை ஆரம்பித்து நீங்களும் சீட்டிழுப்புகளில் பங்கு பற்றுவதற்கான தகுதியை அடையலாம்.

ஹற்றன் நஷனல் வங்கி உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

HNB

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, சுன்னாகம்,
மானிப்பாய், நெல்லியடி.

(சி/985)

# சித்திரைப் புத்தாண்டு சிறப்பு மலர் -2008

அருந்துங்கள்...
அண்ணா கோப்பி
அன்பார்ந்த வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்கள் எல்லோருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்
அண்ணா தொழிலகம் -இணுவில்
தொலைபேசி: 021 222 3565
(C/1024)


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
ஆண்களுக்கான ஆடைகளை சிறந்த முறையில் தைத்து பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
சிற்றிசன் போயில் செலக்ஷன் அன் ரெயிலரிங்
இல.01.பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(C/1028)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
லிங்கம் கிறீம் ஹவுஸ்
219, கஸ்தூரியார் வீதி (C/1025) யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

கதிரவன் நகையகம்
அழகிய தங்கநகைகளை செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்
22 கரட் தங்கநகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்
188, கஸ்தூரியார் வீதி (C/1012) யாழ்ப்பாணம்.

STAR PHONE REPAIR SHOP
24,Grand Bazaar
Power House Road,Jaffna. Tel: 077 5047301
(C/1-013)

யாழ்.நகரில் மக்கள் போற்றும் மகத்தான ஜவுளிகளின் மனங்கவர் மாளிகை
சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்

41, பெரிய கடை, யாழ்ப்பாணம். Tel: 222 2063
(C/997)



சித்திரைப் பெண்ணாள்!

சீரடியில் சிலம் பார்ப்ப
சிங்கார நடை நடந்து
சித்திரைப் பெண்ணவள் வந்தாள்
இத்தனை நாள் பட்ட துயர்
இன்றுடனே தீர்ந்ததென
பக்தர்கள் அவள் தாளைப் பணிந்தார் !

நிலா




எமது சேவைகள்
- நிலையான வைப்பு, சேமிப்பு வைப்புகளுக்கு பாதுகாப்புடன் கூடிய அதியுயர் வட்டி
- வாகனங்கள் கொள்வனவிற்கான குறைந்த வட்டியில் கடன் வசதிகள்
- காணி, வீடுகொள்வனவிற்கான கடன் வசதிகள்

The Finance Company PLC
த பினான்ஸ் கம்பெனி பீஎல்சீ
இல.173,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
கிளைகள்
நெல்லியடி, சாவகச்சேரி
(C/1005)

நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
KE
Karan Electrical
Karan Electrical
கரன் எலெக்ரிக்கல்
இல: 100, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
சகல விதமான மின்சாரப்பொருட்களின் விற்பனையாளரும், விநியோகஸ்தரும்.
(C/1007)

# சித்திரைப் புத்தாண்டு சிறப்பு மலர் -2008

## சிவத்தமிழ் அன்னையின் வாழ்த்துச் செய்தி



இனிய புத்தாண்டு அனைவருக்கும் இன்ப கரமானதாக அமைய முதற்கண் பிரார்த்திக் கிறேன். பிறக்கப்போகும் சர்வதாரி வருடம் அனைவருக்கும் சஞ்சலமற்ற வாழ்வுதரும் வகையில் மலர வேண்டுதல் செய்வோம். எம் மண்ணில் விரைவில் சமாதானம் ஏற்பட்டு மக்கள் அச்சமின்றி வாழும் நாளைக் கண்டு விடவேண்டும் என்பதே எம் நித்திய பிரார்த்தனை. எத்தனையோ இன்னல்களைச் சந்தித்த மக்களின் எதிர்பார்ப்பு அமைதியான ஆனந் தமான வாழ்வே. இவை கைகூடுவதற்கு இறை யருள் வேண்டும். தன் நற் கடமையை சீராகச் செய்து நீதியான வழியில் வாழ ஒவ்வொருவரும் முன்வரவேண்டும். நல்ல முயற்சிகளால் உங்கள் காலத்தை பயனாக்குங்கள். போன நாள்கள் மீண்டும் வருவதில்லை. கடந்த காலங்களை அனுபவங்களாகக்கொண்டுவாழ்வைச் செம்மைப்படுத்த ஆயத்த மாகுங்கள். பலருக்கு பயனுள்ளவர்களாக வாழவேண்டியவர்கள் மனிதர்கள். அப் பிறவி பெற்ற நாம் பாக்கியசாலிகள்.

எனவே புதிய ஆண்டில் புதிய உத்வேகத்தோடு புதிய பணிகளை ஆரம்பியுங்கள். அனைவரும் நிறைவாக வாழ எல்லாம் வல்ல அன்னை துர்க்காதேவியை இறைஞ்சி அனைவருக்கும் நல்வாழ்த்தினையும் ஆசியையும் கூறி அமைகின்றேன்.

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**
ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
தெல்லிப்பளை

## மலரும் சர்வதாரி புத்தாண்டு அனைவருக்கும் சிறப்பாக அமையட்டும்

### வண்ணை வெங்கடேஸ்வரர் ஆலய பிரதமகுரு ஆசி



இந்து சமய பண்டிகைகளில் முதன்மை யா னது சித்திரை புதுவருஷப் பிறப்பாகும். பழையன கழிதலும் புதியன புகுதலும் என்பதற்கிணங்க இல்லத்தினை தூய்மை செய்து கோலமிட்டு அழகுபடுத்தி விஷு புண்ணிய காலத்தில் மருத்து நீர் தேய்த்து நீராடி புத்தாடை அணிந்து மங்கலப் பொருட்களை தரிசித்து தெய்வ வழிபாடாற்றி பெற்றோர், குரு, பெரியோரை வணங்கி ஆசி பெற்று அறுசுவை உணவருந்தி உறவினருடன் தீன்சுவை பண்டங்க ளை பரிமாறி வசந்தகால புதுவருஷத்தை பாரம்பரிய முறைப்படி வரவேற்று மகிழ்கின்றோம்.


மனித வாழ்வில் வெற்றியும் மகிழ்வுமே எல்லோரதும் எதிர்பார்ப்பாகும். நாமும் எமது வருங்கால சந்ததியினரும் மன நிம்மதியுடன் நிறைவான வாழ்வு வாழ இறையருள் வேண்டும். தினசரி எமது இறை வழிபாட்டிலே அமைதியான வாழ்வுக்காகவும் பிரார்த்திக்க வேண்டும். ஒருவருக்கொருவர் உதவி செய்வதும், புரிந்துணர் வுடன் நடந்துகொள்வதும், நல்ல செயல்களை செய்து மனதாலும், மொழியாலும், செயலாலும் எவரையும் வருத்தாது வாழ்ந்து இப் பிறவியின் பயனைப் பெறுவதற்கு இந் நாளில் திடசங்கற்பம் பூண வேண்டும்.

வளமான எமது திருநாடு அமைதிப் பூங்காவாக மாறவும், சகல உயிரினங்களும் தமக்கே உரித்தான தகுதியோடும் நிறைவோடும் வாழவும் கருணை வள்ளலாகிய ஸ்ரீ வேங்கடேச வர்தராஜப் பெருமாளின் தாள்பணிந்து சர்வதாரி வருஷம் யாவருக்கும் சிறப்பாக அமைய ஆசி கூறி வாழ்த்துகின்றோம்.

*இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க*

**ஸ்ரீவத்ஸ.வ.இராஜேஸ்வரக் குருக்கள்**
பிரதமகுரு
ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
வண்ணை -யாழ்ப்பாணம்.

## செஞ்சொற்செல்வரின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி



நல்லன எண்ணிய வண்ணம் புதிய ஆண்டை வரவேற்போம். கடந்து செல்லும் ஆண்டில் கிடைத்த பேறுகளையும் புதிய ஆண்டில் நாம் சாதிக்க வேண்டியவற்றையும் சிந்தையில் இருத்துவோம். இறையருளால் எம் மண்ணில் அமைதிச் சூழல் ஏற்பட்டு அனைவரும் நிம்மதியாக வாழ பிரார்த்திப்போம். இயற்கை எமக்குத் தந்தவை ஏராளம். இயற்கைக்கு நன்றி கூறுவதோடு இந் நாளில் இயற்கை எமக்கு வாழ்வளிக்கும் ஆதாரமாகத் தொடரவேண்டுவோம்.

எம்மைப் பெற்று ஆளாக்கிய தாய் தந்தையை இந் நாளில் நன்றியோடு வழிபாடு செய்து எமக்காக அவர்கள் செய்த தியாகங்களை மனதில் எண்ணிப் போற்றுவோம். எமக்கு அறிவு தந்து வழிகாட்டி, வாழச் செய்த வாழ்வின் வழிகாட்டிகளை நாடித் தேடி வணங்குவோம். சுற்றத்தார், நண்பர், அயலார் முதலானவர்கள் செய்த நன்றியையும், கோவில், மடம், பாடசாலை, வைத்தியசாலை, குளம், துரவு, ஏரி, வயல், பயன்தருமரம் எனப் பலரும் பயன்பெற உதவிய பண்புடையாளரையும் இந்நாளில் அகம் நிறைந்த நன்றியோடு வாழ்த்துவோம்.

நன்றி மறவாத பண்பை நாமும் பின்பற்றி, பிறரையும் ஆற்றுப்படுத்துவோம். பொருளினால், சரீரத்தினால் எவரொருவர் எவ்வளவு சொற்பமான உதவியைச் செய்தாலும் "இது எம் மாத்திரம்? என்று அற்பமாய் எண்ணாமல் அவ்வுதவி செய்யப் பட்ட காலம், காரணம் முதலியவைகளைப் பற்றி மிகப் பெரிய தாகவே கொள்ளும் பழக்கத்தை புத்தாண்டு முதல் வழக்கப்படுத் துவோம்.

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரிவார்"

என்ற வள்ளுவர் பெருந்தகையின் வார்த்தையைச் சிந்திப்போம். சர்வதாரி வருடப் பிறப்போடு நீதி நிலைத்து நிரந்தர சமாதானம் உருவாகி அனைவரும் நிம்மதியாக வாழ ஒன்றுபட்டுப் பிரார்த்திப்போம். எமக்குக் கிடைத்த இனிய மானிட வாழ்வை மகிமை மிக்க வாய்ப்பாகக் கருதி ஒவ்வொரு நிமிடத்தையும் பெறுமதியாகப் பயன்படுத்த திடசங்கற்பம் கொள்வோம்.

அன்பு நிறைந்த உறவுகளோ ! புத்தாண்டை புனிதமாக சந்திக்க தயாராகுங்கள். இறையருளால் அனைவரும் ஆனந்தமாக வாழப் பிரார்த்தித்து வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் சமர்ப்பித்து அமைகிறேன்.

**ஆறு. திருமுருகன்**

## அகில உலக சைவக்குருமார் சம்மேளனம் சிவாச்சார்ய பீடாதிபதியின் ஆசி



சர்வசித்து வருடம் முடிவடைந்து சர்வதாரி வருடம் பிறக்கின்றது. சர்வதாரி என்பதன் பொருள் சகல சம்பத்துக்களும் கிடைப்பதாகும். இன்று பிறக்கும் இப்புத்தாண்டுத் திருநாளில் என் அன்புக்குரிய அனைத்து மக்களுக்கும் என் அகம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். இன்று பிறக்கும் புத்தாண்டு இனிமையும், இன்பமும் தமிழர் இல்லந் தோறும் கொழிக்கின்ற இணையற்ற ஆண்டாய் மலரட்டும்.

புதிய சாதனைகளை நாம் படைக்கின்ற ஆண்டாகவும், புதிய வெற்றிகளை நாம் பெறுகின்ற ஆண்டாகவும், இப்புத்தாண்டு விளங்கட்டும்.

வழி மறிக்கும் தடைகளை உடைப்போம் !
வளமார்ந்த சமாதானம் படைப்போம் !
தழைக்கட்டும் நலங்கள் !
கொழிக்கட்டும் வளங்கள் !
நல்லதோர் காலம் நயமாய் வரும் சித்திரைப் புத்தாண்டே
எல்லோர் வீட்டிலும் கனியவைப்பாய் அமைதிதனை !

இலங்கைவாழ் மக்களுக்கு மட்டுமன்றி இப் புத்தாண்டை கொண்டாடும் தரணி வாழ் தமிழ் மக்கள் அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை என் உளமார்ந்த புத்தாண்டு வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்வதில் உவகை அடைகின்றேன்.

ஆகவே இன்றைய புத்தாண்டு மக்கள் வாழ்வில் மன மகிழ்ச்சியையும் மகோன்னதமான அமைதிநிறைந்த சமாதான நல்லுறவையும் நல்க வேண்டுமென வல்வை நகரின் காவல் தெய்வமாக விளங்கும் அன்னை ஆதிபரா சக்தியை பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"
"சர்வே ஜனகா சுகினோ பவந்து"

"சிவாகம சித்தார்ந்த ஞானதேசிகபானு"
"பிரதிஷ்டாலங்கார சித்தாந்த ஸாகரம்"
"பிரதிஷ்டா சிரோமணி"

**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர் ஜே.பி**
பிரதம குரு: வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ் தானம்
சிவாச்சார்யபீடாதிபதி:-அகிலஉலகசைவக்குருமார் சம்மேளனம்

## சர்வதாரி வருடப்பிறப்பு

**புதுவருடம் பிறக்கும் நேரம்**

சர்வதாரி வருடம் சித்திரை முதலாம் திகதி இன்று பிற்பகல் நாடி 27 விநாடி 05 (மணி 4.55) பூர்வபக்ஷ நவமி திதியில், பூச நட்சத்திரத்தின் முதலாம் பாதத்தில் திருதி நாமயோகத்தில், பாலவக்கரணத்தில், கன்னி லக்கினத்தில் மீன நவாம்சத்தில் இப் புதிய சர்வதாரி வருடம் பிறக்கின்றது.

**புண்ணிய காலம்**

அன்று பிற்பகல் நாடி 17 விநாடி 05 (மணி 12.55) முதல் அன்று முன்னிரவு நாடி 37 விநாடி 05 (மணி 8.55) வரை விஷு புண்ணிய காலமாகும்.

**ஸ்நான முறை**

இப்புண்ணிய காலத்தில் யாவரும் மருத்துநீர் தேய்த்து சிரசில் ஆலிலையும், காலில் இலவமிலையும் வைத்து ஸ்நானம் செய்தல் வேண்டும்.

**கைவிசேஷம்**

திங்கட்கிழமை (14.04.2008) பிற்பகல் 2.18 முதல் 4.10 மணிவரையும்,
பிற்பகல் 6.20 முதல் 7.30 மணிவரை.

**வருடப்பிறப்பன்று செய்ய வேண்டியவை**

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நித்திய நைமித்திய கர்மானுட்டானங்களை முடித்து, தத்தம் வீடுகளிலே சூரியனுக்கு பொங்கல் பூசை வழிபாடு செய்து மங்களகரமாக வாழக்கடவர்.

*ஆதாரம்: வாக்கிய பஞ்சாங்கம்*




அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்.
கணனி சேவைகளுக்கான தனித்துவமான
நிறுவனம்



PC SOLUTIONS
Our Strength is Your Satisfaction
PC SOLUTIONS
527/1, Navalar Road, Jaffna.



(C/1022)



# வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய ர

## ஆலய பிரதம மகோற்சவ குருவின் ஆசிச்செய்தி

காரைநகர் வாரிவளவு பதியிலுறையும் அருள்மிகு கற்பக விநாய கன் திருவருளால் நிகழும் சர்வசித் வருஷம் பங்குனி மாதம் 5ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மங்கள கரமான சர்வதாரி வருஷம் சித்திரை மாதம் ஞாயிற்றுக்கிழமை சித்திரை வருடப்பிறப்பு, சங்கிராந்தி தினம் விஷுபுண்ணிய காலத்தில் கற்பக விநாயகர்பெருமான் சர்வாலங்காரத்துடன் அடியார்களுடைய அரோகரா கோஷத்துடன், சர்வமங்கள வாத் தியங்கள், வேத திருமுறை பராயணங்கள், நாதாஞ்சலிகளு டன் தேரேறி வலம்வரும் காட்சி அற்புதமானது.

எல்லாம் வல்ல விநாயகர் திருவருளால் அடியார்களுடைய வேண்டுதல்களை ஏற்று அவர்களை அருளாட்சி செய்து வாழ் வாங்கு வாழவைக்கும் கருணைக் கடலாம் கற்பக விநாய கனைத் தொழுது அவரின் தேர்வடம் பிடித்து அதனூடாக அவரின் மன தில் இடம்பிடித்துக்கொள்ளும் அடியார் பணியைப் போற்று வோமாக.

குறித்த வேளையில் நிகழும் நித்திய நைமித்திய பூசை களும் ஆலய புனிதத்தன்மையும் போற்றப்படவேண்டும். நிறைவேற்றப்பட வேண்டிய திருப்பணிகள் நிறைவுபெற ஆலய பரிபாலகருக்கும், தொண்டு செய்யும் அடியார் கூட்டத்திற்கும் நாற்புறமும் வானளாவ உயர்ந்து நிற்கும் கோபுரத்தின் கரு வறையுள் வீற்றிருந்து அருளாட்சி செய்யும் கற்பகத்தானை தொழுது அருளாசி கூறி புதுவருட வாழ்த்துக்களையும் தெரி வித்து வாழ்த்தி வணங்குவோமாக.

ஸர்வேஜனாஸ சுகினோ பவந்து
சமஸ்த சன்மங்களளே பவந்து
சுபம்

வை.மு.பரமசாமிக்குருக்கள் –
முத்துக் குமாரசாமிக் குருக்கள்

கற்பக விநாயகர் ஆலயம்
வாரிவளவு–காரைநகர்






## வாரிவள்வானுக்கு இன்று ரதோற்சவம்...

ஈழவளநாட்டின் வடபால் அமைந்த காரைநகர் வாரிவளவில் தேரேறி வருவது எங்கள் கணபதி, கற்பக விநாயகர். வேண்டுவார் வேண்டுதலை தீர்க்கும் விநாயகன். வாரிவளவில் எங்கள் பிள்ளையார் தனித் தெய்வம் மட்டுமல்ல அவர் எல்லாவற்றையும் கடந்த நல்ல நண்பன். உற்ற தோழன் நல் ஆசான். எவர் எங்கிருந்தாலும் அவர்களிற்கு உற்ற காதலன். இப்படி யான விநாயகன் வருடந் தோறும் சித்திரைப் புத்தாண்டன்றே தேரேறி வரு வது சிறப்பிற்குரியதாகும்.


இன்று தேர் ஏறி உலாவரும் கற்பகவிநாயகர் அருள்
அனைவருக்கும் கிடைக்க வேண்டுகின்றோம்

துவிச்சக்கர வண்டிகள், அவற்றிற்கான
உதிரிப்பாகங்கள், T.V டெக் வகைகள், றேடியோ
வகைகள், அன்ரனா வகைகள் போன்றவற்றை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள

**இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்**

இல.50,52,54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தொ.பே.021-222 2988, 3096 Fax. 222 2368

(C/1018)

வாடிக்கையாளர் அனைவருக்கும்
விநாயகர் அருள் வேண்டுகின்றோம்

PEPSI யாழ்.ஏக விநியோகஸ்தர்கள்

**கஜமுகன்**

**ஹாட் வெயார்ஸ்**

147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/1017) T.P. 222 2833, 222 7182, 222 7144

புதுவருடப்பிறப்பில் தேர் ஏறி வரும் வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகரின் அருள் அனைவருக்கும் கிடைக்க வணங்குகின்றோம்

உலகின் எந்தப்பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும்
மற்றும் உள்ளூர், வெளியூர் தொலைத்தொடர்பு வசதிகள், லெமனேற்றிங், பிறின்ரிங், கிறபிக்ஸ் டிசைனிங்,
கணனி உதிரிப்பாகங்கள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

Internet Browsing
சேவையைப் பெற்றுக்கொள்ளவும்
முகம் பார்த்துக் கதைப்பதற்கேற்ற
வசதிகளுடன் குறைந்த கட்டணத்தில்
வெளிநாட்டு அழைப்புகளைப்
பெற்றுக்கொள்ளலாம்

விரைவான பணப் பரிமாற்றத்திற்கு WESTERN UNION பணப் பரிமாற்றம்

சகல விதமான
SLT MAXtalk
SLT NetCard

யாழ்.குடாநாட்டிலிருந்து உலகின்
எப்பாகத்திற்கும் கடிதங்கள் மற்றும்
பொதிகளை மிக விரைவாக அனுப்பிட

FedEx Express
நம்பகரமான
துரிதசேவை

கணனி சம்பந்தமான சகல பொருட்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
குறைந்த விலைகளுடன் பெற்றுக்கொள்ளலாம்.
Warranty 1 & 3 Years With Servise


**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)

(C/1021)

# ப ரதோற்சவ சிறப்பு மலர் -13.04.2008






தமிழ் புத்தாண்டில் தேரேறி வரும் விநாயகனின் தேர் இற்றைக்கு எழு பது வருடங்கள் பழமைபொருந்தியதாகும். முழுமையாக தேக்கு மரத்தினால் வடிவமைக்கப்பட்ட இத்தேர் மிகவும் கலையம்சம் பொருந்தியதாகும். அத்துடன் ஒவ்வொரு சிற்பங்களும் ஒவ்வொரு மரபுக் கதைகளைக் கூறுவதாக அமைந்துள்ளமை மேலும் சிறப்பு வாய்த்ததாகும். யாழ். குடா நாட்டு ஆலயங்களில் அமைந்த தேர்களில் ஆராய்ச்சிக்குரிய கலையம்சங்கள் இத்தேரிலேயே பொறிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான பெருமை பொருந்திய தேரில் இன்று எங்கள் விநாயகன் தேரேறி வருகின்றான். அடியார்கள் வேண்டுவதை வாரி வாரி வழங்கும் கற்பக விநாயகனின் தேரின் வடம் பிடித்தால் விநாயகன் மனதில் இடம்பிடிப்பார் என்பதில் ஐயமில்லை. ஆதலால் விநாயகனின் ரதோற்சவ பவனியைக் கண்டு களிப்பவர்கள் அனைத்து செல்வங்களையும் பெற்று சிறப்பாக வாழ வழியேற்படும்.

"வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுந்து வரும்"

வாரிவளவு
ப.ஐங்கரன்
கரைநகர் செய்தியாளர்



## நிர்வாகத்தினரின் உள்ளத்திலிருந்து...

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சப்த தீவுகளில் ஒன்றாகிய காரைநகரில் பல சைவ ஆலயங்கள் அமைந்துள்ளன. இவற்றில் வாரிவளவு கற்பக விநாய்கர் ஆலயத்தில் தமிழ் சித்திரைப் புத்தாண்டு அன்று இரதோற்சவம் நடைபெறுவது தனிச்சிறப்பு ஆகும். நான்கு வாசல்களிலும் கோபுரங்கள் அமைத்து இலங்கையில் தனக்கென தனிப் பெருமை பெற்று விளங்குகின்ற இவ் ஆலயத்தில் நித்திய, நைமித்திய பூசைகள் சைவ ஆகம விதிப்படி நடை பெற்று வருகின்றமை சிறப் புக்குரியது.

இருந்தும் நாட்டின் இன்றைய சூழ்நிலை காரணமாக சைவ ஆகம விதிகளை முழுமையாகக் கடைப்பிடிக்க முடியாமல் போவதையிட்டும் கவலைகொள்கின்றேன். இதற்கெல்லாம் எம்பெருமான் விரைவில் தீர்வு தருவார் என்றே திடமாக நம்புகின்றேன்.

கடந்த 05.04.2008ஆம் திகதியன்று ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் எமது ஆலயத்தின் பிரதம குருவும், நயினை நாக பூசணி அம்பாள் ஆலய பிரதம குருவுமாகிய சிவசிறி ப.முத்துக்குமார சுவாமிக் குருக்கள் தனது தந்தையாரான சிவசிறி வை.மு.பரமசாமிக் குருக்களின் ஆசியுடன் கொடியேற்றி மகோற்சவம் பக்தி யுணர்வு பூர்வமாக ஆரம்பமாகியது.

அன் றைய தினம் யாழ்.பல்கலைக்கழக சைவ சித்தாந்த முதுகலைமானி பட்டப் படிப்பை மேற்கொள்ளும் சுமார் முப்பந்தைந்து மாணவர்கள் குறித்த பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலா நிதி மா.வேதநாதன் தலைமையில் கலந்துகொண்டமை மேலும் சிறப் படைய வைத்தன. தொடர்ந்து எட்டு நாட்கள் திருவிழா நடைபெற்று இன்றையதினமான 13.04.2008 இல் இரதோற் சவம் நிகழ திருவருள் கைகூடியுள்ளது.

இவ் உற்சவத்தினை மிகவும் சிறப்பாக நடாத்துவதற்கு எமக்கு ஒத்துழைப்பு நல்கிய சிவாச்சாரியார்கள், அந்தணப் பெரியோர்கள், சைவப் பெரியார்கள், கிராமத்து மக்கள் குறிப்பாக இளம் சமுதாயத்தினர் தமது பூரண ஒத்துழைப் பினை நல்கிவருகின்றனர்.

இவர்கள் அனைவரும் சகல செல்வங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ விநாயகனை வேண்டி நிற்கின்றேன்.

மேலும் இவ் ஆலயம் சைவ உலகிற்கு எடுத்துக்காட்டாக ஆகம விதிப்படி கிரிகைகள் நடைபெற அனைத்து அன்பர்களும் மென் மேலும் ஒத்துழைக்க வேண்டும் எனக்கேட்டு மீண்டும் விநாயகனை வணங்கி அமைகின்றேன்.

நிர்வாகஸ்தர்
கற்பக விநாயகர் ஆலயம்

வாரிவளவு
காரைநகர்

இன்று தேரில் ஆரோகணிக்கும் கற்பக விநாயகரின் அருள்வேண்டி நிற்கின்றோம்
சகலவிதமான பலசரக்குப் பொருட்களையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள
றூபா பன்முக வர்த்தகம்
இல. 104A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 222 2479
(C/1016)

வாடிக்கையாளர் அனைவருக்கும் வாரிவளவு கற்பக விநாயகரின் அருள் வேண்டுகிறோம்.
உலகப் பிரசித்தி பெற்ற இங்கிலாந்து தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்ட 12வருட உத்தரவாதம் கொண்ட Raleigh சைக்கிள் யாழ்.ஏக விநியோகஸ்தர்கள்.
ஆண், பெண் இருபாலருக்கும் உண்டு.
துவிச்சக்கரவண்டிகள் அவற்றுக்கான உதிரிப்பாகங்கள் அனைத்தையும் பெற்றிட நாடுங்கள்.
வெங்கடேஸ்வரா
இல.125 A, 127 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(C/1015)

அனைவருக்கும் வாரிவளவு விநாயகர் அருள் கிடைக்க வேண்டுகிறோம்.
சர்வதேச கடன் அட்டைகள் ஏற்கப்படும்
சீமாட்டி புடவைக்கடல்
கிளைகள்:- மங்கை சில்க்ஸ்
மொடேர்ன் மாக்கற்
(இல.15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.)
(இல.122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
T.P:- 222 2196 Fax. 222 21
(C/1019)

அனைவருக்கும் கற்பக விநாயகரின் அருள் வேண்டி நிற்கின்றோம்
ஏகவிநியோகஸ்தர்
யுனிலிவர் ஸ்ரீலங்கா லிமிற்றட், எனேர் ஐஸ்சர் லங்கா லிமிற்றட், வொண்ரெறா பிறான்ட் லங்கா (பிறைவேற்) மலிபன் பிஸ்கட் உற்பத்தியாளர், லிமிற்றட், செல்காஸ் லங்கா லிமிற்றட், U.S.A சமையல் எண்ணெய் இறக்குமதியாளர்களும் விநியோகஸ்தர்களும்.
எஸ்.வி.முருகேசு
154,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222 2911 222 2202
(C/1020)

# சித்திரைப் புத்தாண்டு சிறப்பு மலர் -2008



எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய சித்திரைப்புத்தாண்டு வாழ்த்துக்கள்

## தயா நகைப்பூங்கா

தங்க நகை வியாபாரம்

அழகிய கலைநயம்... எழிலுறு தொழில் வளம்... உயர்தரமிகு தங்க நகைகளுக்கு...

22கரட் தங்க நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்:



213C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C/1008)----

---

புதுவருட நல் வாழ்த்துக்கள்



## செல்வீ நகை அகம்

நவீன அழகிய தங்க ஆபரணங்களை 22 கரட்டில் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்

1/3 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

1/9 Kasthuriar Road, Jaffna.

(C/1011)

---

அனைவருக்கும் எமது சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

## வானகம் போன் சிற்றி

- கையடக்கத் தொலைபேசி & உதிரிப்பாகங்கள் திருத்தம், விற்பனைக்குப் பின்னரான திருத்தம்.
- கணனி & உதிரிப்பாகங்கள் திருத்தம், விற்பனைக்குப் பின்னரான திருத்தம்.

T.P. 0777 238588
0715231003

இல. 04, 05, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(C/1010)

---

அனைத்து வாடிக்கையாளருக்கும் எமது சித்திரைப்புத்தாண்டு வாழ்த்துக்கள்



## யாழகம்



சகல விதமான விளையாட்டு உபகரணங்கள், வீரர்களுக்கான ரி-சேட், ஜேசி போன்றவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

தொ.பேசி: 021 222 5563

இல: 56∂, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.

(C/1006)

---

அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!



## சிறி நதியா நகை மாளிகை

அசல் 22 கரட்டில் குறித்த தவணையில் நம்பிக்கையுடன் செய்து பெற்றிட கஸ்தூரியார் வீதியில் தலை சிறந்த ஸ்தாபனம்.



இல. 01 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

No. 01 Kasthuriyar Road, Jafffna.

(C/1009)

---

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் சித்திரைப் புதுவருட வாழ்த்துக்கள்!

## கணேசன் சென்ரர்



அனைத்து வகையான ஆடைகளையும் பான்சி பொருட்களையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்



கே. கே. எஸ். வீதி, இணுவில்.

T.P. 021 222 5708

(C/1023)

---

அனைத்து வாடிக்கையாளருக்கும் எமது சித்திரைப்புத்தாண்டு வாழ்த்துக்கள்

## Jaffna Electricals

Abans Ltd இன் ஏக விநியோகஸ்தர்கள்

LG KML Cables

**Authorised Dealers Abans Ltd.**
**Distributors for KML Cables.**

*141, Power House Road, Jaffna.*
*Tel : 021 222 5766 Fax : 021 222 2552*

Abans Ltd இன் உத்தரவாதத்துடன்

Stanley Road, Jaffna.
Tel : 021 222 2353

(C/1014)

# சர்வதாரி வருடம் உங்களுக்கு எப்படி?

எமது சமயம், மொழி, கலாசாரம் மூன்றும் சங்கமித்து மிளிர்கின்ற சிறப்பான நிகழ்வு சித்திரைப் புத்தாண்டு எனப்படும் தமிழ் வருடப் பிறப்பாகும்.

இந்த நன்னாளில் சூரிய பகவான் எமது முதல் ராசியான மேடராசியில் உச்சம் பெற்று சஞ்சரிக்கின்ற காலமாகும். 60 தமிழ் வருடங்களில் 22 ஆவதாக பிறக்கும் சர்வதாரி எனப்படும் வருஷம் 13.04.2008 ஞாயிற்றுக்கிழமை பி.ப.4.55 மணி நேரமளவில் பூர்வ பட்ச நவமித் திதி, பூச நட்சத்திரம், திருதி நாம யோகம், பாலவகரணம், கன்னி லக்கினம், மீன நவாம்சம் அமைந்த காலத்தில் வாக்கியப் பஞ்சாங்கப்படி பிறக்கிறது.

இப் புதிய வருஷம் மலர்கின்றது. விஷு புண்ணிய காலம். 13.04.2008 ஞாயிறு பிற்பகல் 12.55 மணிமுதல் இரவு 8.55 மணிவரை இப் புண்ணியகாலம் யாவரும் சங்கற்பித்து மருத்துநீர் தேய்த்து சிரசில் ஆலிலையும் காலில் இலவம் இலையும் வைத்து ஸ்நானம் செய்து சிவப்பு அல்லது பச்சை நிறப் பட்டாடை அன்றேல் புதிய ஆடையாயினும் உடுத்து மாணிக்கம், மரகதம் இழைத்த ஆபரணம் அணிந்து, சுகந்த சந்தனம் பூசி, நறுமலர் சூடி, விக்னேஸ்வரர் முதலான இஷ்ட குல தெய் வழிபாடு செய்து, சூரியனுக்கு பொங்கல் பூசைகள் செய்து, குரு பெற்றோர் முதலிய பெரியோரை வணங்கி ஆசி பெறுவது நன்று.

சரி 12 இராசிகளுக்கும் இந்த வருடப் பிறப்பு எப்படி அமையப் போகிறது என்பதை பார்ப்போம்.




(அஸ்வினி,பரணி,கார்த்திகை,முதலாம் பாதம் நட்சத்திரங்கள்)

மேன்மையான நற்குண இயல்புகளும் எல்லோரையும் நேசிக்கின்ற பண்பும் பரோபகாரணமான சிந்தனையும் சிறப்புற கொண்டவர்கள் நீங்கள். சர்வதாரி வருஷப் பிறப்பின் முன்னராகவே உங்கள் ராசியில் சாயக்கிரகங்கள் என போற்றப்படுகின்ற ராகு, கேது கிரகங்கள் 09.04.2008 அன்று இராகு மகர ராசிக்கும் கேது கடகராசிக்கும் பெயர்ச்சி பெறுகின்றன.

இந்த சஞ்சாரத்தில் மேடராசிக்கு சுபஸ்தானம் ஆகிய 4ஆம் இடம் கேதுவும், ஜீவஸ்தானமாகிய 10ஆம் இடம் ராகுவும் அமைகின்றன.

ராகுவின் சஞ்சாரம் தொழில் நிலையில் பிரயாணங்கள் எதிர்பாராத வகையில் நன்மைகளைக் கொடுக்கும். கேதுவின் சஞ்சாரம் சிறு சிறு உடல்நிலை சுகவீனங்கள் மருத்துவச் செலவுகள் போன்ற பலாபலன்களைக் கொடுக்கும் இருப்பினும் இந்த சர்வதாரி வருசத்திலே உங்கள் ராசிக்கு குருபகவான் மிக மிகச் சிறப்பான நிலையான பாக்கியஸ் தானமாகிய ஒன்பதாம் இடத்திலே அமர்ந்து எல்லாவிதமான பாக்கியங்களையும் உங்களுக்கு வாரி வழங்குவார்.

2008ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் திகதி வரை அமையும் குருவின் சஞ்சாரம் மிகவும் யோகமானதாக அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் சிறப்பான வெற்றியும் அமையும்.

குடும்பத்தில் மகிழ்வும் சுபகாரிய நிலைகளும் அமையும். திருமணம் போன்ற நிலையை எதிர்நோக்குவோருக்கு அப்பலன் பூரணமாக அமையும்.

வெளிநாட்டுப் பிரயாணங்கள் மனம்போல அமைகின்ற பலாபலன்கள் உண்டு. தொழில் நிலைகளில் எதிர்பாராத வகையில் பதவி உயர்வுகளும் நல்ல பண வரவுகளும் அமையும். இந்த வருடம் முழுவதும் சனி பகவான் உங்களின் ராசிக்கு பஞ்சம ஸ்தானமாகிய 5ஆம் இடம் அமைகின்றார்.

எனவே சிறு சிறு மனச்சஞ்சலம் சுகவீனம் என்பன இடை இடையே ஏற்பட்டு மறையும். சனிஸ்வரனுக்கு எள் எண்ணெய் சிட்டி ஏற்றி சனிவாரம் வழிபாடு மேற்கொண்டு வருவது மிகவும் நன்மை தரும். மற்றும் உங்களின் ராசி அதிபதித்தெய்வம் துர்க்கை அம்மனை வழிபாடு செய்வது சிறப்பாகும்.

(தொடரும்)

## இராசிபலன்

13.04.2008
(சித்திரை 01, ஞாயிற்றுக்கிழமை)
புநர்பூசம் முற்பகல்11.52மணிவரை
அட்டமி பிற்பகல்04.27மணிவரை
இராகுகாலம்04.35-06.05மணிவரை
சுபநேரம்09.05.10.35மணிவரை
சர்வதாரி வருஷப்பிறப்பு


| | |
|---|---|
| மேடம் | மனச்சஞ்சலம், கல்வியில் ஆர்வம், ரோக பயம், முயற்சி தாமதம். |
| இடபம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, சகோதர உதவி,போசனசுகம். |
| மிதுனம் | விவாதம், கடினமுயற்சி, தனவிரயம், உடல்நலக்குறைவு. |
| கடகம | தேகநலன், சயனசுகம், நல்ல முயற்சி, ஜனவசியம். |
| சிங்கம் | பிதா சிந்தை, கோபப்படுதல், காரிய அலைச்சல், சுபசெலவு. |
| கன்னி | மனமகிழ்ச்சி, நல்ல வருமானம், நண்பர்கள் சந்திப்பு, காரிய அனுகூலம். |
| துலாம் | சுபநிகழ்வு, கடின உழைப்பு, தூரதேசச் செய்தி, போசன சுகம். |
| விருச்சிகம் | ஆன்றோர் சந்திப்பு, புதிய திட்டமிடல், அச்சமான நிலை, கட்டுப்பாடு. |
| தனுசு | வீண்தொல்லை, காரிய தடங்கல், பண விரயம், வாகனபயம். |
| மகரம | திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு, செய் தொழில் விருத்தி, புதிய திருப்பம், |
| கும்பம் | பணவருவாய், சத்துரு ஜெயம், உடல் நலம், முயற்சி கைகூடும். |
| மீனம் | வியாபார நன்மை, காரிய இடையூறு, மனச்சஞ்சலம், அதிக செலவு. |

வளவன்

# கங்குலி சிறப்பான துடுப்பாட்டம்; இந்திய அணி முன்னிலை பெற்றது

(கான்பூர்)

கங்குலியின் சிறப்பான துடுப்பாட்டத்தால் சரிவிலிருந்து மீண்ட இந்திய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் நேற்றைய இரண்



டாம் நாள் ஆட்டநேர முடிபில் 9 விக்கெட்டுக்களை இழந்து 288 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதன் மூலம் தென்னாபிரிக்க அணியை விட முதலாவது இன்னிங்ஸில் இந்திய அணி ஒரு விக்கெட் மீதமுள்ள நிலையில் 23 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கின்றது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இத்தொடரின் முதலாவது போட்டி சமநிலையானதுடன் இரண்டாவது போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.

இந்நிலையில் தீர்க்கமான மூன்றாவதும் இறுதியுமான போட்டி நேற்று முன்தினம் கான்பூரில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி அதன் முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 265 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் சிமித் 69 ஓட்டங்களையும் அம்லா 51 ஓட்டங்களையும் மக்கன்சி 36 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் இஷாந் சர்மா, ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களையும் பியூஸ் சாவ்லா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இரண்டாம் நாளான நேற்று தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஆரம்பத்திலேயே சேவாக் 8, ஜாபர் 15 ஆட்டமிழக்க 35 ஓட்டங்களை எடுத்து இரண்டு விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

எனினும் தொடர்ந்து இணைந்த ராவிட்-லக்ஸ்மன் ஜோடி நிதானமாக ஆடி அணியை மீட்டபோதும் மோர்கலின் துல்லியமான வேகத்தில் ராவிட் 29 ஓட்டங்களுடனும் லக்ஸ்மன் 50 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க 123 ஓட்டங்களை எடுத்த நிலையில் 4 விக்கெட்டுக்களை இழந்தது.


எனினும் அடுத்துக் களமிறங்கிய கங்குலி சிறப்பாக துடுப்பெடுத்தாடி இந்திய அணியை மீட்டெடுத்தார்.

இறுதியில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிபில் இந்திய அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 288 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் கங்குலி 87 ஓட்டங்களையும் லக்ஸ்மன் 50 ஓட்டங்களையும் மற்றும் யுவராஜ் சிங், அணித்தலைவர் தோனி ஆகியோர் தலா 32 ஓட்டங்களையும் எடுத்தனர்.

சிறிசாந் 9 ஓட்டங்களுடனும் இஷாந் சர்மா ஓட்டமெதனையும் ஆரம்பிக்காத நிலையிலும் களத்திலுள்ளனர்.

பந்துவீச்சில் ஸ்ரையன்,மோர்கல் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் ஹரிஸ் 2 விக்கெட்டுக்களையும் மற்றும் நிற்னி ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.



பந்தை விளாசும் கங்குலி

போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

(5)

# சல்மான் பட் அதிரடியில் பாகிஸ்தான் அணி வெற்றி

(பைசலாபாத்)

இரண்டாவது ஒருநாள் போட்டியிலும் பாகிஸ்தான் அணி டக்-வேத் லூயிஸ் முறையில் 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இவ்வெற்றியின் மூலம் 5போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பாகிஸ்தான் அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.


பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பங்காளாதேஷ் அணி 5 ஒரு நாள் போட்டிகள், ஒரு இருபது -20 போட்டி கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இத்தொடரின் முதலாவது ஒருநாள் போட்டியில் வெற்றி பெற்று பாகிஸ்தான் அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்க இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் பைசலாபாத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 48.2 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 225 ஓட்டங்களை எடுத்தது.

மழை குறுக்கீட்டாலேயே பங்களாதேஷ் அணியின் இன்னிங்ஸ் 48.2 ஓவர்களிலேயே முடிபுறுத்தப்பட்டது.

இதில் மகமுடுல்லா ஆட்டமிழக்காமல் 58 ஓட்டங்களையும் தமீம் இக்பால் 60 ஓட்டங்களையும் எடுத்தனர்.



சல்மான் பட்

பந்துவீச்சில் சயிட் அப்ரிடி 3 விக்கெட்டுக்களையும் தான்வீர்,இப்ரிகார் அன்யும் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்.

மழை காரணமாக இடை நிறுத்தப்பட்ட ஆட்டம் மீண்டும் சில மணிநேரத்தின் பின் ஆரம்பமானபோது பாகிஸ்தான் அணிக்கு வெற்றி இலக்காக டக்-வேத் லூயிஸ் முறையில் 25 ஓவர்களில் 158 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது.

இதனடிப்படையில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி சல்மான் பட்டின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் 23.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 160 ஓட்டங்களை எடுத்து டக்-வேத் லூயிஸ் முறையில் 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் சல்மான் பட் 76 ஓட்டங்களையும், ஆட்டமிழக்காமல் மொகமட் யூசுப் 32 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹசன்,ரிஷா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். ஆட்டநாயகனாக பாகிஸ்தான் வெற்றிக்கு வழிசமைத்த சல்மான் பட் தெரிவானார். (5)

# சித்திரைப் புத்தாண்டு சிறப்பு மலர் -2008


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்

அனைவருக்கும் தமிழ்ப்புத்தாண்டு

நல் வாழ்த்துக்கள்



14.04. 2008 திங்களன்று வங்கி வாடிக்கையாளர்களின் புத்தாண்டு கொடுக்கல் வாங்கல் களுக்காக காலை 7 மணி முதல் திறந் திருக்கும் என்பதுடன் வைப்புச் செய்பவர்களுக்கு கைவிஷேடத் துடன் வேறும் பல பரிசில்கள் வழங்கப்படும்.

(கி/1004)

BOC

இலங்கை வங்கி

தேசத்தின் வங்கியாளர்


# இராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட்டு அரசியல் தீர்வை முன்னெடுக்க வேண்டும்

## புத்தாண்டுச் செய்தியில் அகில இலங்கை இந்துமாமன்றம் கோரிக்கை

நாங்கள் பரிதவித்த நிலை முற்றாகவே நீங்கி புத்தாண்டிலிருந்து விமோசனம் கிடைக்கவேண்டும். இதுதான் நாட்டு மக்களின் இன்றைய ஏக்கம். பல சொல் லொண்ணா வேதனைகளாலும், வடக்கு கிழக்கில் நடக்கும் யுத்தம் காரணமாக ஏற்பட்டுள்ள பொருட் களின் விலை ஏற்றங்களினாலும் வாடும் மக்களுக்கு நிம்மதி வேண்டும்.

தங்கள் அரசியல் அதிகாரத்தை இனத்து வேச மேடையில் வளர்க்க விரும்பும் அரசியல்வாதிகளுக்கு மட்டுமே தேவைப்படுகின்ற அர்த்தமற்ற யுத்தத்தினால் வடக்கு கிழக்கில் வாழும் மக்கள் இன்னும் அவலப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டிலிருந்து இனத் துவேசம் வேருடன் அறுத்து எறியப் படவேண்டும். சகல விதமான வன் முறைகளும் மறையவேண்டும். எங்கும் அமைதியும் அன்பும் நிம்மதியும் நிலவ வேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை இந்துமா மன்றம் விடுத்துள்ள புத்தாண்டுச் செய் தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாமன்றத்தின் தலைவர் வி.கயிலாய பிள்ளை, பொதுச் செயலாளர் கந்தையா நீல கண்டன் ஆகியோர் இணைந்து வெளி யிட்டுள்ள அந்தச் செய்தியில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது,

சிங்களமக்களும், தமிழ் மக்களும் ஒன்று கூடி புத்தாண்டைக் கொண்டாட இருக்கிறார் கள். இந்தச் சந்தர்ப்பத்தில் கூட ஏ-9 பாதை மூடப்பட்டிருப்பது, வடபகுதி மக்கள் நாட் டின் ஏனைய பகுதி மக்களிடமிருந்து பிரிக் கப்பட்டு, அவர்கள் இந்த நாட்டு மக்கள் இல்லை என்ற உணர்வை ஏற்படுத்துகிறது. இந்த நாட்டில் வாழும் சகல மக்களையும் ஒன்று படுத்துவது தான் அரசாங்கத்தின் கொள்கை யானால் ஏன் இந்தநிலை தொடரவேண்டும்? தங்களது சுயநல அரசியல் இலாபங்களையும், குறுகிய மனப்பான்மையையும் விடுத்து அதற்கு மேலாக அரசியல்வாதிகள் பலரும் இந்த நாட்டு தமிழ் மக்களுக்கு அவர்களது அபிலாஷைகளை திருப் திப்படுத்தும் வகையில் அரசியல் தீர்வை வழங் கக் கூடியவர்களாக உயரவேண்டும்.

இதன்மூலம் தமிழ் பேசும் மக்கள் இந் நாட்டில் கௌரவத்துடனும் சமத்துவத்துட னும் வாழும் நிலை ஏற்படவேண்டும். தமிழ் மக்கள் சொந்த நாட்டிலேயே தொடர்ந்தும் அகதிகளாகவோ, இரண்டாம் தர பிரஜை களாகவோ வாழ்க்கையை தொடரமுடியாது.

உச்ச நீதிமன்றத்தின் பல கட்டளைகள் உதாசீனப்படுத்தப்பட்டு தமிழ் மக்கள் வீதித் தடை நிலையங்களில் துன்புறுத்தப்படுதல் தொடர்கின்றது. மேலும் அவர்கள் கைது செய்தப்படுதலும் கடத்தப்படுதலும் தொடர் கின்றது. அவர்கள் நடமாடுகின்ற சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது.

இராணுவநடவடிக்கை உடனடியாக நிறுத் தப்பட்டு, பாதுகாப்பு ஒழுங்குகள் என்ற பெயரில் பிரிக்கப்பட்டுள்ள பல தடங்கல்கள் நீக்கப் பட்டு, நியாயமானதும் நீதியானதுமான அரசி யல் தீர்வை வழங்கவேண்டும் என்று அரசாங் கத்தை பகிரங்கமாக வேண்டுகின்றோம். இந்த சிங்கள- தமிழ் புத்தாண்டு வேளையிலாவது போர் நிறுத்தத்தை பிரகடனம் செய்வதற்கும், ஏ-9 பாதையைத் திறப்பதற்கும் வட பகுதி மக்களுக்குத்தேவையான அத்தியாவசியப் பொருட்களை அனுப்பி வைப்பதற்கு அரசாங் கம் முன்வரவேண்டும் என வலியுறுத்துவது டன் இந்நாட்டு தமிழ் மக்கள் கௌரவத்துட னும் மரியாதையுடனும் சமத்துவத்துடனும் வாழ ஆவன செய்யப்பட வேண்டும் எனவும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றோம்.

இலங்கை அரசாங்கத்துடன் தங்கள் செல் வாக்கை பாவித்து உடனடியாக போர் நிறுத் தம் செய்யப்படவும், இந்நாட்டில் மீண்டும் சமா தானம் ஏற்பட நியாயமான, நீதியான அரசியல் தீர்வு காணப்படவும் வலியுறுத்துமாறு இந் உதியாவிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் அழுத் தம் கொடுக்கும்படி பாரெல்லாம் பரந்து வாழும் இந்து மக்களை பகிரங்கமாக வேண்டு கிறோம்.

நிறைவாக, இந்நாட்டிலும் வெளிநாட் டிலும் வாழும் இந்து மக்களுக்கு ஒரு வேண்டு கோள். புத்தாண்டுப் பிறப்பையொட்டி கேளிக் கைகளிலும் பெரும் கொண்டாட்டங்களி லும் பணத்தை விரயம் செய்யாமல் இங்கு பலவகையிலும் அல்லற்படும் எங்கள் சகோ தர சகோதரிகளுக்கும், குழந்தைகளுக்கும் நிவாரணமும் மறுவாழ்வும் கொடுக்கும் வகை யில் உதவ முன்வரவேண்டும். அகில இலங்கை இந்து மாமன்றம் தனது சமூகப் பணிகளை தொடர்கின்றது. மாமன்றமும் ஏனைய நிறுவனங்களும் இணைந்து நடத் தும் சிறுவர் இல்லங்கள் மற்றும் முதியோர் இல் லங்களுக்கு தங்கள் ஆதரவை வழங்கலாம்.

அவ்வாறு செய்கின்ற மக்கள் சேவைதான் உண்மையான மகேஸ்வர பூசையாகும். மலரு கின்ற இந்தப் புத்தாண்டில் எங்கள் மக்களுக்கு விமோசனம் கிடைக்க வழிகாட்டு மாறு அருள் மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெரு மானைப் பிரார்த்தித்து வணங்கி நிற்கிறோம்.

## மீண்டு(ம்) பிறக்குது புத்தாண்டு

ஆண்டுகள் எத்தனை பிறந்துகடந்தன
அவை நினைவில் பதித்தது எதை
நீண்டு நிலைக்குது முடிவில்லா போரிங்கு
நிலைத்து நிற்பவை சோகத்தின் சுவடுகளே
தூண்டுக் கிளிகளாய்வாழ்விடத்தில் கட்டுண்டு
கொடும் பார்வையின் இலக்குகளாய் நாம்
தாண்டமுடியவில்லை துன்பப் பெருங்கடலை
தினம் மோதும் துயரத்தின் அலைகளால்
மீண்டு(ம்) பிறக்குது புத்தாண்டு மண்ணில்
மீளுமோ பழைய வாழ்வின் புதிய கோலம்
வேண்டுதல் செய்வோம் தெய்வங்களை
அவர்களும்
கோவிலுள் இருந்தால் கண்டு நின்றே

அல்வையூர் சி.சிவநேசன்

## ஆண்டவா நீதான் போக்கிட வேண்டும்

சித்திரை பிறக்குது சித்திரை பிறக்குது
சிறப்புக்கள் சேர்ந்திடும்
சிறப்புக்கள் சேர்ந்திடும்
எத்தனை ஆசைகள் எத்தனை கனவுகள்
எங்கள் மனதில் இருக்குது இருக்குது
நித்தமும் துன்பம் துயரம் அவலம்
நிம்மதி எப்போ கிடைக்கும் என்று
அத்தனை தமிழனும் ஏங்கிடும் நிலையை
ஆண்டவா நீதான் போக்கிடவேண்டும்

கவிஞர் வ.யோகானந்தசிவம்

## வித்தகமாய் வாராய்

ஏர் முனைக்கும் வல்லதொரு வருடமாய் வாராய்
ஏற்றமிகு கல்விக்கு வித்தகமாய் வாராய்
தேர் இழுக்கத் தேசமெலாம் சந்தோசம் தாராய்
தெருவெங்கும் சுகம் வர சர்வதாரியே பாராய்

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்.

# சித்திரைப் புத்தாண்டு சிறப்பு மலர் -2008


PCP PC PARK (PVT) LTD

*the path to computer paradigm*

## எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



## புத்தாண்டு தினத்தன்று நாடெங்கிலும் உள்ள எமது கிளைகளில் மிகக் குறைந்த விலைகளில் கணனிகள் மற்றும் கணனி உதிரிப்பாகங்களை பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

எமது வாடிக்கையாளர் நலன் கருதி இன்று எமது வாடிக்கையாளர் சேவை நிலையத்தை ஆரம்பித்து வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இல.46A,46B,46C வைத்தியா வீதி,
தெகிவளை

**PC Park(Pvt)Ltd**
#130A,Galle Road,
Dehiwala
T.P: 0112714115
Fax :0112713423

**PC Park(Pvt)Ltd**
Technical Division
46A,46B,46C Waithiya Road,
Dehiwala
Hotline:0773951635

**PC Park(Pvt)Ltd**
#633,K.K.S Road,Jaffna.
T.P: 0212229581
Fax :0212229581

**PC Park(Pvt)Ltd**
Pointpedro Road,
Nelliyadi.
T.P: 0212264828
Fax :0212229581

(சி/1003)

Web : www.pcpark.lk E-mail : info@pcpark.lk, jaffna@pcpark.lk

# சித்திரைப் புத்தாண்டு சிறப்பு மலர் -2008



அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதம் 22 கரட் தங்க நகைகளுக்கு

## கிருஷ்ணா நகை மாளிகை

இல. 09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

கிளை நிறுவனம்:- கிருஷ்ணா அடகுக் கடை இல. 370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

T.P :- 021 222 5046



(C - 988)

---

அனைவருக்கும் இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்



## எரிக்கணேஷ்

மூக்குக் கண்ணாடியகமும் பல் கட்டுமிடமும்


கிளை: 91, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்.

86, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.



564, 566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P : 021 222 2486



(C - 990)

---

மலரும் புத்தாண்டு அனைவருக்கும் சாந்தியும், சமாதானமும் நிறைந்ததாய் அமையட்டும்!



## சீமாட்டி புடைவைக் கடல்

கிளை : மங்கை சில்க்ஸ்

இல. 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

T.P :- 021 222 2196 (C - 991)

---

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!



## இளவரசி சேலைச் சோலை

பட்டுப்புடவைகளின் சாம்ராஜ்யம்

**Elavarasi Textile**

(Specialist in Wedding Sarees)

57, நவீன சந்தை, யாழ்ப்பாணம்

TP :- 021 222 2503



(C - 995)

---

சகலருக்கும் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

## சண் சிற்றி

இல. 518, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(OPT முன்பாக)

சகல விதமான மருந்து வகைகள், பால்மா வகைகள், சிறுவர்களுக்கான பொருட்கள் விற்பனையாளர்கள்

(C - 996)

---

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புதுவருட நல்வாழ்த்துக்கள்!



## லாவண்யா பல் மூக்குக் கண்ணாடி அகம்



மிதப்புப் பற்களுக்கு நிரந்தர கிளிப் செய்து கொடுக்கப்படும்.

552, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (போதனா வைத்தியசாலை முன்பாக)

தொ.பே.021 222 9053 (C - 989)

கிளை :- பருத்தித்துறை வீதி, நெல்லியடி, (பொலிஸ் நிலையம் முன்பாக)

ஞாயிற்றுக்கிழமைகளில் 8.30-12.00 மணிவரை திறந்திருக்கும்.

---

புதுவருட வாழ்த்துக்கள்!

கடந்த ஆண்டில் ஏற்பட்ட துன்பங்கள் நீங்கப் பெற்று புதிய ஆண்டில் பல சுபீட்சங்கள் பெற்று வாழ வாழ்த்தும்

## கிருஷ்ணா பல்பொருள் வாணிபம்

யாழ். கொழும்பு பத்திரிகை விற்பனையாளர், விளம்பரமுகவர்.

சந்நிதி றோட், உடுப்பிட்டி

(C - 998)

---


அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

## YASO MOTORS

Importes & Dealers in Motor Cycles & Spare Parts.

Head Office :

No :- 163 Stanley Road, Jaffna.





(C - 992)

---

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புதுவருட நல்வாழ்த்துக்கள்!

சகலவிதமான பாடசாலை உபகரணங்கள் மற்றும் அப்பியாசப் புத்தகங்கள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரேஇடம்





## பூபாலசிங்கம் புத்தகசாலை

இல. 04, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

TP :- 021 222 6693 (C - 994)

---

மலரும் புத்தாண்டு சாந்தி, சமாதானம் தரும் ஆண்டாக மலரட்டும்!

## மைதிலி நகைமாடம்

தரமான தங்க நகை வியாபாரி

89V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**Yarl Maithily Jewellers**

157 J, Sea Street, Colombo - 11



(C - 993)

நல்லதைச் செய்ய வேண்டும்; நல்லதைச் சொல்லவேண்டும்; நல்லதை நினைக்க வேண்டும் என்ற இலட்சியத்தில் ஈடுபட்டால் யாவும் நல்லனவாகவே இருக்கும். -சுவாமி இராமதாசர்

வலம்புரி

## மனதில் புத்துணர்வு ஏற்படாமல் புத்தாண்டால் என்ன செய்ய முடியும்?

இன்று 'சர்வதாரி' புத்தாண்டு பிறக்கின்றது.

தமிழ்- சிங்களப் புத்தாண்டு எனக் கூறுவதற்குள் இருக்கக்கூடிய ஒற்றுமை செயலிலும் நடைமுறையிலும் இல்லை என்பதை எண்ணும் போது நெஞ்சம் நெருடுகிறது.

தமிழ்-சிங்களப் புத்தாண்டு ஒன்றே போதும் இந்த நாட்டில் ஒற்றுமையாக வாழ்வதற்கு. எனினும் தமிழ் -சிங்களப் புத்தாண்டு என்ற ஒற்றுமைப் பதம் புத்தாண்டு பிறக்கும்போது மட்டுமே நினைவு கூரப்படுகிறது.

சிங்களம் -பௌத்தம் என்ற குறுகிய சுற்றுக்குள் சுழன்றுகொண்டு இனவாதத் தீயை வளர்த்து நாட்டில் அழிவையும் துன்பத்தையும் உருவாக்கியவர்கள் இனிமேலாவது தாங்கள் விட்ட தவறை ஒருகணம் சிந்திப்பார்களாயின் சமாதானத்தின் கிடைப்பனவை விரைவுபடுத்த முடியும்.

ஆனால் பிறக்கின்ற புத்தாண்டில் கூட, பொய்யுரை கூறப்படுமாயின் எப்படித்தான் நாட்டில் அமைதியும் சமாதானமும் ஏற்பட முடியும்?

ஆக புத்தாண்டுகள் பிறப்பதனாலோ புதுமைகள் பேசுவதாலோ நாட்டில் அமைதி -சமாதானம் -இன ஒற்றுமை ஏற்பட்டு விடாது.

மாறாக மனித மனங்களில் புத்துணர்வு ஏற்படவேண்டும். மனங்கள் புதுமைப்படும்போது- புனிதப்படும்போது எல்லா மக்களும் ஒற்றுமையாக, எல்லா நலனும் உரிமையும் பெற்று சுதந்திரமாக வாழவேண்டும்.

ஒருவரின் உரிமையை என்னொருவர் பறிப்பதற்கும் பரிகாசப்படுத்துவதற்கும் உரிமையில்லை என்பதை உணர்கின்றபோது, எங்கும் அமைதியும் சமாதானமும் ஏற்படும்.

இதன் விளைவாக நாட்டில் பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி, மனித வள முன்னேற்றம் என்பன தழைத்தோங்கும்.

இதற்கான தேவை, இனவாத சிந்தனையில் இருந்து மீண்டு, இலங்கை என்ற இந்த அழகிய நாடு எல்லா இன மக்களுக்கும் சொந்தம் என்பதை ஏற்றுக் கொள்வதாகும்.

தமிழ்-சிங்களப் புத்தாண்டிற்குள் இருக்க கூடிய ஒற்றுமை அரசியல்வாதிகளின், அரசியல் தலைவர்களின் ஆசியுரைக்கான மூல மந்திரமாக மட்டும் இருப்பது அவ்வளவு நல்லதல்ல.

தமிழ்-சிங்கள மக்களிடையே புத்தாண்டில் இத்துனை ஒற்றுமை இருக்குமாயின் அங்கு நீண்ட - நிலைத்த - பாரம்பரியமான தொடர்பும் உறவும் உள்ளதென்பது உறுதியாகின்றது.

அப்படியானால் மலர்கின்ற புத்தாண்டின் பேரால், சமாதானத்திற்கு மீண்டுமோர் சந்தர்ப்பத்தை வழங்குவோம்.

அதுவே அனைவரும் வழங்கிய ஆசியுரைக்கு அடித்தளமாகவும், அவனியில் அவை நிறைவேறவும் வழிசமைக்கும்.

# இலங்கையில் போரை நிறுத்துவதற்காக நோர்வே கடுமையாக முயற்சி செய்தது

## சிறப்புத் தூதுவர் ஜோன் ஹன்சன் தெரிவிப்பு

(ஒஸ்லோ)

இலங்கையில் அனைத்து இனங்களின் உணர்வுகளும் கவனத்தில் எடுக்கப்பட்டு ஒரு சமாதானத் தீர்வு ஏற்பட வேண்டும் என்று நோர்வே நாட்டின் வெளிவிவகாரத்துறை அமைச்சகத்தின், இலங்கையில் அமைதி முயற்சிகளுக்கான சிறப்புத் தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் தெரிவித்துள்ளார்.

நோர்வே தலைநகர் ஒஸ்லோ நகரில் 'தெற்கு ஆசியாவின் அமைதியும் சமாதானமும்' என்னும் மாநாடு நேற்று முன்தினம் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்றது. இதன் இரண்டாம் நாள் நிகழ்வில் ஜோன் ஹன்சன் பௌயர் ஆற்றிய உரை வருமாறு,

இலங்கையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போரை முடிவுக்குக் கொண்டு வரவும் சமாதானத்தை ஏற்படுத்தவும் நோர்வே அரசு முயற்சி எடுத்து வந்துள்ளது.

இலங்கை அரசோடு பேசினோம். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனோடும் பேசினோம். போரினால் பலர் உயிரிழந்து வருகின்றனர். அத்தீவிலுள்ள அனைத்து இனங்களின் உணர்வுகளும் கவனத்தில் எடுக்கப்பட்டு ஒரு சமாதானத் தீர்வு வரவேண்டுமென்றே நாங்கள் விரும்புகிறோம்.

அதற்குரிய முயற்சிக்கு இங்கு நடைபெறும் மாநாடு உதவிட வாழ்த்துகிறேன் என்றார்.

அமைதியையும் சுதந்திரத்தையும் நாடும் அனைத்துலக மகளிர் அமைப்பின் செயலாளரான டாகனர்சோர்பே அம்மையார் அங்கு பேசுகையில், இலங்கை,பர்மா, நேபாளம் ஆகிய நாடுகளில் இப்படிப் பிரச்சினைகளும் மோதல்களும் இருக்கிற இடங்களில் எல்லாம் அடக்கு முறைக்கு பலியாவது பெரும்பாலும் அபலைப் பெண்கள்தான். பாலியல் வன் கொடுமைகளுக்கு இலக்காகி இருக்கின்றனர். இராணுவ நடவடிக்கையின் போது அப்பாவி பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படும் கொடுமை தொடர்ந்து நடைபெறுகிறது.

இத்தகைய அவலத்தைப் போக்க உலகெங்கும் விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். அதற்கு இத்தகைய மாநாடுகள் மிகவும் தேவை என்று கூறினார்.

தொடர்ந்து; வாழும் கலை அமைப்பின் பண்டிட் ரவிசங்கர், பேராசிரியர் ஸ்துர்லா ஸ்டால்செட், நேபாளத்தின் ஐ.நா. மன்றத்தின் மக்கள் தொகை நிதி அமைப்பின் இயக்குநர் டாக்டர் வாசிம் சமான் ஆகியோர் உரையாற்றினர்.

முற்பகல் 10 மணிமுதல் 11 மணி வரை 'சமாதான முயற்சிகளில் ஊடகங்களின் பங்கு' என்னும் தலைப்பில் நடைபெற்ற அமர்வுக்கு நோர்வே ஊடகவியலாளர் அமைப்பின் தலைவர் பிரான் கோயிஸ் கோத்தியெ தலைமை தாங்கினார்.

போர்க்களங்களில் நேரடியாகச் செய்தி சேகரிக்கும் நோர்வே செய்தியாளர் சிகர்டு ஃபால்கன்பொக் மிக்கல்சென், இந்தியாவைச் சேர்ந்த பேராசிரியர் பிரம்மா செல்லானே, நோர்வேச் செய்தியாளர் கோதரின் ஆஸ்பாஸ், ஒஸ்லேர் பல்கலைக்கழகத்தின் ஊடககல்வி பேராசிரியரான ரூனே ஓட்டோசன் ஆகியோர் கருத்துக்களை வழங்கினர். (ந-5)

## சிறந்த தமிழ் நூல் தெரிவுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(கொழும்பு)

கலாசார அலுவல்கள் திணைக்களம் கடந்த ஆண்டு பிரசுரிக்கப்பட்ட தமிழ் நூல்களுள் சிறந்த நூல்களைத் தெரிவு செய்து பரிசு வழங்கும் பொருட்டு நூலாசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

நூலாசிரியர் இலங்கையராக இருப்பதோடு சமர்ப்பிக்கப்படும் நூலானது ஜனவரி 1ஆம் திகதிக்கும் 2007 டிசம்பர் 31ஆம் திகதிக்கும் இடையில் வெளிவந்த நூலாக இருக்க வேண்டும்.

இந்த பரிசளிப்பு தெரிவில் கலந்து கொள்ள விரும்பும் நூலாசிரியர்கள் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் நூலின் நான்கு பிரதிகளையும் செயலாளர் இலக்கிய குழு, கலாசார அலுவல்கள் திணைக்களம், செத்சிறிபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது அஞ்சல் மூலமோ ஒப்படைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# வன்முறைகளினால் வீடுகளை இழந்தவர்களுக்கு நிவாரண கடன் வழங்கும் திட்டம் அறிமுகம்

1983 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இடம்பெற்ற வன்முறைகளினால் வீடுகளையும் காணிகளையும் இழந்தவர்களுக்கு நிவாரண கடன்உதவி வழங்கும் செயற்றிட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த இடர்முகாமைத்துவ அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

1983 யூலை 24ஆம் திகதிக்குப் பின்னர் இதுவரை இடம்பெற்ற தீவிரவாத வன்முறைகளுக்கு எதிராக பாதுகாப்புத் தரப்பினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது வீடுகள், காணிகளை இழந்தவர்களுக்கு இந்தக் கடனுதவி வழங்கப்படும் என அமைச்சின் செயலாளர் ஏ.சி.எம்.ரவிக் தெரிவித்தார். எனினும் வன்முறைச் சம்பவங்களில் பாதிக்கப்பட்டு அதற்காக அரசாங்கத் திடம் நட்டஈடு பெற்றவர்களுக்கு கடனுதவி வழங்கப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்தார்.

1977ஆம் ஆண்டிற்குப் பின்னர் நடைபெற்ற தேல்தல்களின் போது இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் வீடுகளையும், காணிகளையும் இழந்தவர்களுக்கும் கடனுதவி வழங்க நவடிக்கை எடுக்கப்பட்டதாக அவர் கூறினார். அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியினால் இந்தக் கடனுதவித்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாகவும் அதிகபட்சத் தொகையாக 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என வும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். கடனை திருப்பிச் செலுத்த 15வருடகால அவகாசம் வழங்குவதோடு இதற்கென நூற்றுக்கு 6%வட்டி அறவிடப்படவுள்ளது.

கடன் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர் பாக அவர்களை தெளிவு படுத்தியுள்ளதாகவும் இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் மேலும் கூறினார். (அ-7)

## அன்பும் சேவையுமே ஆனந்தம் - பகவான் பாபா



எங்கே நம்பிக்கை இருக்கிறதோ அங்கே அன்பு இருக்கின்றது. அன்பு எங்கே இருக்கிறதோ அங்கே அமைதி இருக்கின்றது. அமைதி இருக்கும் இடத்தில் சத்யம் இருக்கின்றது. சத்யம் இருக்கும் இடத்தில் கடவுள் இருக்கின்றார். கடவுள் இருக்கும் இடத்தில் ஆனந்தம் நிறைகின்றது.

நீருக்கு தண்மையும், நெருப்பிற்கு வெம்மையும் இருப்பது போல் மனிதனுக்கு அன்பு இயற்கையானது. இருந்தும் மனிதன் அன்பையும் தேடுகின்றான்; ஆணவத்தையும் காட்டுகின்றான். இன்றைய உலகம் அணுகுண்டையும் விரும்புகிறது. அமைதியையும் விரும்புகின்றது. ஆனால் ஒன்று வந்தால் ஒன்று ஓடிவிடும். அதேபோல் ஆணவமுண்டானால் அன்பு மறைந்துவிடும். அன்பு என்பது கண்ணாடி போன்றது. நாம் அடுத்தவரிடம் அன்பைக் காட்டினால்தான் அதன் பிரதிவிம்பம் நமக்குத் தோன்றும்.

இன்றைய புத்தாண்டு தினத்தில் பகவான் அருளுகின்றார், இன்றிலிருந்தாவது உனது இயற்கை இயல்பான அன்பையே மூலதனமாக்கு அன்பில்லா மனிதன் பிணமாவான். கொழுந்துவிட்டு எரியும் நெருப்பிலும் புகையுண்டு. சான்றோர் வாழ்விலும் குறையுண்டு. நமக்கு நெருப்புத்தான் தேவை புகையல்ல. சகல மதங்களும் சாற்றும் அன்பையே அடுத்தவரிடம் பரிமாறு.

எல்லா உயிர்களிடத்தும் இறைவன் இருக்கின்றான். நாம் அடுத்தவரை திட்டும் போதும், அடிக்கும் போதும் நமக்குள் இருக்கும் இறைவனையே சாடுகின்றோம் என்பதை உணர்தல் வேண்டும். வலிமை என்பது பிறரை அடித்து வெல்வதல்ல. பிறர் நம்மேல் சாற்றும் பழிகளை பொறுத்துக் கொள்வதே. இறைவன் காரணம் இன்றி எதையும் படைக்கவில்லை. உன்னையும் என்னையும் கூட என்கிறார் பாபா.

எனவே அன்பிற்கடுத்தாற்போல் சேவையே முக்கியத்துவம் பெறுகின்றது. மக்கள் சேவையே மகேசன் சேவை. நமது இயல்பிற்கேற்றாற் போல் அடுத்தவரிற்கு சேவைசெய்ய வேண்டும். தியானம், தவம் என்பதனால் மட்டும் பிரயோசனமில்லை. சேவையே மனிதனின் இரண்டாவது உயர்வு.

பொறாமை, கோபம், தற்பெருமை மனிதனை வாட்டும் நோய்கள். இது மருத்துவத்திற்கு அடங்குவதில்லை. இறை நாமமே இதற்கு உயர்ந்த மருந்து. அன்பு, இரக்கம், தியாகம், இவை நிரம்பிய உள்ளம் நறுமணம் நிரம்பிய நந்தவனம். அன்பெனும் விளக்கணைந்தால் பொறாமை எனும் இருள் சூழும். எனவே செயற்கைக்கோள் படைத்த விஞ்ஞானியைப் பாராட்டும் நாம் இயற்கைக் கோள் படைத்த இறைவனை ஏன் எண்ணிப்பார்க்கக் கூடாது? நமது உயிர் தங்கியிருக்க இறைவன் நமக்களித்த வாடகை வீடுதான் இந்த உடல். இதை என்றைக்கோ ஒருநாள் விட்டு விலகத்தான் வேண்டும்.

தன்னைக் கல்லால் அடிப்பவருக்கு இனிய கனிகளைத் தருகிறது மரம். அதுபோல் நம்மைச் சொல்லால் அடித்தாலும், கல்லால் அடித்தாலும் கூட நாம் இனிய சொற்களையும் செயல்களையுமே ஆற்ற வேண்டும்.

அன்பின் வடிவங்களே! நீங்களெல்லாம் மகிழ்ச்சியான, ஆதர்ஷமான வாழ்க்கை வாழ்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் ஆசி கூறி உலகம் முழுவதும் சாந்தியும் சமாதானமும் பரவட்டும் "லோகா ஸ்ஸமஸ்தா ஸ்ஸுகினோ பவந்து" - பாபா.

ஜெய்சாயிராம் - யாதவன்-

# கனடா பிரதமர் தெரிவித்த தமிழ் புத்தாண்டு வாழ்த்து

தமிழ்ப் புத்தாண்டைக் கொண்டாடும் அனைத்து மக்களுக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன் எனக் கனடாப் பிரதமர் ஸ்ரீபன் ஹார்பர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் பங்கெடுக்கும் கனேடியத் தமிழ் மக்களை நினைவுபடுத்தும் இச் சந்தர்ப்பத்தில் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கனடா நாட்டுக் குடிமகன் என்ற வகையில் பொதுவான கலாசாரம், கருத்துக்கள், சமத்துவம், சகோதரத்துவம், சமாதானம், சுதந்திரம், ஜனநாயகம் என்பதில் நாங்கள் பெருமைப்படுகின்றோம்.

நீங்கள் உங்கள் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் ஆலயங்களுக்குச் சென்று நாட்டில் சமாதானமும் சுபீட்சமும் வர வேண்டும் எனப் பிரார்த்தியுங்கள். வருகின்ற ஆண்டு சமாதானமும் நம்பிக்கையும் சுபீட்சமும் நிலவ கனடா அரசாங்கத்தின் சார்பில் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என அவர் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். (ந-5)

# எரிக்சொல்லுடன் வை.கோ. சந்திப்பு



நோர்வேயின் அனைத்துலக அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்மை தமிழ்நாட்டின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வை.கோ. நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

எரிக்சொல்ஹெய்மின் அமைச்சகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பின்போது வை.கோவை எரிக்சொல்ஹெய்ம் ஆரத் தழுவிக் கொண்டார். உங்களைப் பற்றி அன்டன் பாலசிங்கம் நிறையச் சொல்லியிருக்கின்றார். சந்திக்க வேண்டும் என்று நானும் எண்ணிக் கொண்டிருந்தேன். இன்று உங்களைச் சந்தித்ததில் மிகுந்த மகிழ்ச்சி என்றார் எரிக்.

வை.கோ. அதற்கு மறுமொழியாக, தமிழர் ஆகிய நாங்கள் உங்கள் நாட்டின் மீதும் குறிப்பாக உங்கள் மீதும் மிகுந்த அன்பும் மரியாதையும் கொண்டுள்ளோம். நீங்கள் பாலசிங்கத்தின் உயிரைக் காத்ததிலும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகத் தொடர்ந்து செயற்பட்டு வருவதையும் எப்படி நாங்கள் மறப்போம் என்றும் எங்கள் மனமெல்லாம் நிறைந்து உள்ள நன்றி உணர்ச்சியை நேரில் சொல்ல எனக்கு இந்த வாய்ப்புக் கிடைத்தது மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

முதல் நாள் வரையிலும் விசா கிடைக்காததால் ஏமாற்றம் அடைந்தேன். எப்படியோ கடைசி நேரத்தில் உங்கள் நோர்வேத் தூதரகம் விசா வழங்கியதால் உங்கள் நாட்டுக்கு வரவும் மாநாட்டில் பங்கேற்கவும் வாய்ப்புக் கிடைத்தது என்றவுடன் எரிக்சொல்ஹெய்ம் உங்களின் விசாப் பிரச்சினை அறிந்தவுடன் நான்தான் உங்களுக்கு விசா வழங்குமாறு செய்தி அனுப்பினேன் என்றார்.

அதற்கு வை.கோ. நன்றி கூறினார். தற்போது இலங்கையிலுள்ள நிலைமை குறித்துத் தொடர்ந்து 30 நிமிடங்கள் வை.கோ. கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார். இந்த உரையாடலில் நோர்வே அரசின் வெளியுறவு அமைச்சகத்தைச் சேர்ந்தவரும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இலங்கைக்கான சிறப்புத் தூதருமான ஜோன் ஹான்சன் பௌயரும் கலந்து கொண்டார். (ந-5)

# விடுதலைப் புலிகளை தடைசெய்ய அவுஸ்திரேலிய அரசு பரிசீலனை

## பாலித கோகன்ன தெரிவிப்பு

(அவுஸ்திரேலியா)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அவுஸ்திரேலியாவில் தடை விதிப்பது குறித்து அந்நாட்டு அரசாங்கம்தீவிரமாக பரிசீலனை செய்து வருவதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோகன்ன தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் வெளிவிவகார அமைச்சர் ஸ்ரீபன் ஸ்மித்தை பேர்த் நகரில் கடந்தவாரம் பாலித கோகன்ன சந்தித்துப் பேசினார். அப்போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு அவுஸ்திரேலியாவில் தடை விதிக்க வேண்டும் என்று பாலித கோகன்ன வலியுறுத்தியிருந்தார்.

இன்னிலையில் அதனைத் தீவிரமாக பரிசீலிப்பதாக அவுஸ்திரேலியாவின் புதிய அரசாங்கம் தெரிவித்ததாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் பாலித கோகன்ன கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அவுஸ்திரேலிய மண்ணில் நிதி திரட்டப்படுவதனை தடுக்க அந்நாட்டு அரசு மேற்கொண்ட சட்டபூர்வ நடவடிக்கைகளை நாம் பாராட்டுகின்றோம் என்றும் அப்பேட்டியில் பாலித கோகன்ன தெரிவித்துள்ளார். (5)

## துர்க்காதேவி ஆலயத்தில் புதுவருட பிறப்பு நிகழ்வு

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிமுதல் சர்வதாரி வருடப்பிறப்பு நிகழ்வுகள் நடைபெற உள்ளன.

நிகழ்வில் காலை 6 மணிக்கு காலைப் பூசையும், 6.30 மணிக்கு வசந்த மண்டப பூசையும் நடைபெற்று அம்பாள் வீதி உலா இடம்பெறும். தொடர்ந்து 7 மணிக்கு சங்கிராந்தி தீர்த்த உற்சவமும், 10 மணிக்கு ஸ்நபன அபிஷேகமும், 11 மணிக்கு உச்சிக்காலப் பூசையும், பி.ப 4 மணிக்கு வருடப்பிறப்பு அபிசேகமும், பி.ப 5 மணிக்கு சாயரட்சை விசேட பூசையும், மாலை 7 மணிக்கு அர்த்தஜாமப் பூசையும் இடம்பெறும்.

## நாத விநோதம் இசை நிகழ்ச்சி

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு இன்று மாலை 6 மணிக்கு உடுவில் மீனாட்சி அம்மன் கோவிலில் நாத விநோதம் என்ற சிறப்பு இசை நிகழ்ச்சி, உடுவில் இந்து இளைஞர் மன்ற ஏற்பாட்டில் இடம்பெறும். இதில் யாழ். பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் தவநாதன் றொபேர்ட் உட்பட 20 கலைஞர்கள் பங்கேற்கவுள்ளனர். (ஓ)

## சிவபூமி முதியோர் இல்லத்தில் சிறார்களின் கலை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புதுவருடத்தை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை சிவபூமி முதியோர் இல்லத்தில் திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச்சங்க 'நிறை வாழ்வு இல்ல' சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளது. நிறைவாழ்வு இல்லத்தைச் சேர்ந்த 180 சிறுவர்களும் மற்றும் பணியாளர்களும் புதுவருடத்தை கொண்டாடும் முகமாக தொல்புரம் சிவபூமி இல்ல முதியோருடன் பகிரவுள்ளனர். (ந-16)

## பருத்தித்துறையில்...

நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்றுள்ளது. குண்டுத்தாக்குதலில் அதே இடத்தில் ஒரு இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டதாகவும் மேலும் ஒரு சிப்பாய் படுகாயமடைந்து மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ந-52)

## ஜெயராஜுடன் பலியான கேணல் யாழில் 11 வருடம் இருந்தவர்

(கொழும்பு)

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயுடன் கொலையுண்ட கேணல் உதயதீர என்ற படை அதிகாரி யாழ்ப்பாணத்தில் 11 ஆண்டு காலமாகச் செயற்பட்டவர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

கடைசிக் களமுனைப் பகுதியாக மணலாறு 22-3ஆம் பிரிகேட்டின் மக்கள் இணைப்பு அதிகாரியாகச் செயற்பட்ட அவர் அண்மையில் அம்பேபுஸ்ஸ சிங்க படைத் தலைமையகத்திற்கு மாற்றப்பட்டிருந்தார் என்றும் தெரியவந்துள்ளது. (ந-5)

## ஜே.வி.பி. கட்சி முரண்பாடு லங்கா பத்திரிகை நிறுத்தம்

(கொழும்பு)

ஜே.வி.பிக் கட்சிக்குள் எழுந்துள்ள முரண்பாடுகள், பிளவுகள் காரணமாக அந்த அமைப்பினால் நடாத்தப்பட்டு வந்த லங்கா என்ற வாராந்தப் பத்திரிகை நிறுத்தப்படவிருப்பதாகத் தெரியவருகின்றது.

கட்சியிலிருந்து பிரிந்துள்ள பிரசார செயலாளர் விமல் வீரவன்சவின் நேரடிக் கண்காணிப்பில் இந்த வாராந்தப் பத்திரிகை இதுவரை காலமும் வெளிவந்திருந்தது.

ஜே.வி.பி. ஆதரவாளர்களின் நிதியுதவியுடன் நடத்தப்பட்டு வந்த இந்தப்பத்திரிகை நிறுத்தப்பட்டதும் ஜே.வி.பியின் தலையீடு இன்றி றிவித என்ற பெயரில் பத்திரிகையை வெளியிட குறிப்பிட்ட ஆதரவாளர்கள் தீர்மானித்துள்ளனர். (ந-5)

## அமைச்சர்களைப் பாது...

குறைவாக இருப்பதுடன் அவர்கள் அனைவரும் மகிந்த ராஜபக்ஷவினதும் அவரது குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்புப் பணிகளிலேயே ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதனால் ஏனைய அமைச்சர்கள் மற்றும் பிரமுகர்களின் பாதுகாப்பில் உள்நாட்டில் பயிற்சி பெற்ற அமைச்சரவை பாதுகாப்பு பிரிவினரே நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் பாதுகாப்பு செயற்பாடுகள் மற்றும் இக்கட்டான தருணங்களை எதிர்கொள்ளும் திறன் என்பன மிகவும் குறைவாக உள்ளதால் அவற்றை அதிகரிப்பதற்கு இந்தியாவின்ஒத்துழைப்பை இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது. (ந-5)

## மன்னாரில் முன்னகர்வினை...

ஆட்லறிகள், பல்குழல் வெடிகணைகள் ஆகியவற்றின் செறிவான சூட்டாதரவுடனும் கிபீர் ரக வானூர்திகளின் தாக்குதல் ஆதரவுடனும் செறிவான 4 முனைத் தாக்குதல்களை நடத்தினர்.

கட்டுக்கரை , மண்மோட்டை , பாலைப்பெருமாள் கட்டுப் பகுதியிலிருந்து பெரிய உடைப்பு சுலுசுப் பக்கமாக ஒரு நகர்வும் பரம்பாங் கண்டலிலிருந்து கள்ளிஅடைஞ்சான் நோக்கி ஒரு நகர்வும் இத்திக் கண்டலிலிருந்து புளியங்குளம் நோக்கியும் இத்திக்கண்டலிலி ருந்து பறைய குளம் நோக்கியும் படையினரால் மேற்கொள்ளப்ளபட்டன.

இதனை எதிர்த்து நேற்றுப் பிற்பகல் 1.30 மணிவரை விடுதலைப் புலிகள் நடத்திய உக்கிர தாக்குதலையடுத்துப் படையினரின் நகர்வுகள் நிறுத்தப்பட்டன. இதில் 30க்கு அதிகமான படையினர் கொல்லப்பட்டனர். 75 படையினர் காயமடைந்தனர். விடுதலைப்புலிகள் தரப்பில் 3 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

மேலும் மன்னார் மடு - தெட்சணாமருதமடு பகுதி மீது படையினர் தொடர்ச்சியாக எறிகணைத் தாக்குதலை நடத்தி வருகின்றனர். தெட்சணாமருதமடுவுக்கு மேற்காக உள்ள விளாத்திக்குளம் பகுதியிலும் மோதல் இடம் பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## நாட்டில்...

இயற்கையாலும் ஏற்பட்டு வரும் மனித அவலங்கள் இனிமேலும் தொடர்வதை எவரும் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.

மனித அழிவுகள் இன , மத , மொழி என்ற பேதங்கடந்து நிறுத்தப்பட வேண்டும். நாட்டில் அமைதிக்காகவும் சமாதானத்திற்காகவும் பாடுபடுவதே இறைவனுக்கு நாம் செய்யும் நன்றியாகும்.

மக்கள் துன்பப்படும்போது, மனித அவலம் நீடிக்கும்போது நாம் எதைக் கூறினாலும் அவை பொருத்துடையதல்ல. மக்களின் வாழ்வுக்காக அவர்களின் உயர்வுக்காக உழைப்பதே மானிடத்தின் உயர் பண்பாகும்.

எனவே பிறக்கின்ற புத்தாண்டில் நிலைத்த சமாதானம் ஏற்பட நாம் அனைவரும் ஒருமித்துக் குரல் கொடுப்போம்; பாடுபடுவோம். அதனை ஏற்படுத்த புத்தாண்டில் திடசங்கற்பம் பூணுவோம். இவ்வாறு அந்த வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# மரண அறிவித்தல்

## பிரம்மஶ்ரீ இரத்தினசபாபதிக் குருக்கள் சுப்பிரமணியக் குருக்கள்

(பிரதம குரு, அரியாலை நீர்நொச்சித்தாழ்வு சித்திவிநாயகர் ஆலயம்)

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட பிரம்மஶ்ரீ இரத்தினசபாபதிக் குருக்கள் சுப்பிரமணியக் குருக்கள் 12-04-2008 சனிக்கிழமை பிற்பகல் 12.45 மணி அளவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசபாபதிக் குருக்கள், புவனேஸ்வரி அம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியக்குருக்கள் மற்றும் அன்னபூரணி அம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், அமிர்தகுணவல்லி அம்மா அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற ரேவதி இரவிநாத சர்மா மற்றும் முரளீதரக் குருக்கள் (பிரதமகுரு அரியாலை நீர்நொச்சி தாழ்வு சித்தி விநாயகர் ஆலயம்), சுகந்தி பகீரதி (ஆசிரியை, புத்தூர் ஶ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவசுப்பிரமணியசர்மா (ஓய்வு பெற்ற பிரதி அதிபர், யாழ் இந்துக் கல்லூரி), அனுராதா ஆகியோரின் அன்பு மாமனாரும் சுகன்யா, ஶ்ரீவித்யா, ஶ்ரீ பிரணவரூபசர்மா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இலக்கம் 77/2 ஆனந்தன் வடலி வீதி , கொழும்புத்துறை, யாழ்ப்பாணத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் 13.04.2008 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

77/2 ஆ.வ.வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(c-1030)

தகவல்;
மனைவி, பிள்ளைகள்


# YOGI'S BEAUTY

ACADEMY OF BEAUTY CULTURE,
HAIR DRESSING & HOME SCIENCE

யோகிஸ் இன் இனிய புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்!

(c-1029)

75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
T.Phone:- 021 222 2796, 060 221 0077, 077 7164923


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.04.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.